காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 07 சனிக்கிழமை 20.03.2021 கதிர் 135

## இனிது ரகசியம் அல்ல!

நேற்றைய காலைக்கதிர் மாலை இதழ் வெளியானது முதல் நேற்றுப் பின்னிரவு வரை எனக்குத் தொடர்ந்து பல அழைப்புகள், வட்ஸப் மற்றும் வைபர், மெஸஞ்சர் செய்திகள். சுமார் ஒரு டசின் குறிப்புகள் வந்தன.

'உதயன்' பத்திரி

பக்கம்02

தொழினுட்பப் பிரிவு
விஸ்டம்
A/L 2023
2021 Day

பொறியியற் தொழினுட்பவியல்
K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)
P.சண்முகதாசன் (Rtd Instructor Buildings - SLTES)
R.சிவரூபன் NCECP, NCT (Electrical & Electronic)
R.நிரூஜன் B.Sc
M.சுதாகரன் NDT, B.Ed
P.கிருபாகரன் NDT (Const Tech)
P.கணேஸ் NDT Automobile, (Instructor Automobile)

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
P.விமலநாதன் B.Sc
R.நிரூஜன் B.Sc
A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
P.நிரோஜனன் B.Sc (Bio Technology)
M.விஸ்னுதேவன் B.Sc (Agri), PGDE
P.S.ஷாணஸ் B.Sc (Agri)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

விவசாய விஞ்ஞானம்
P.S.ஷாணஸ் B.Sc (Agri)

புவியியல்
S.ஶ்ரீகிருஸ்ணா BA (Hons), PGDE (Merit)

கணிதம் (7)
S.தர்சன் B.Sc (Hons), PGDE (Merit)
M.கோபிஸ்கண்ணா NDT (Maths)

ஊடகக் கற்கை
S.கோணேசலிங்கம் Dip in Media

சித்திரம்
S.கருணாகரன் NDT, B.Ed

077 248 7774
076 552 9093
"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

### பிரபாகரனின் படத்துடன் பிறந்தநாள் செய்தி பிரசுரித்த வழக்கு;

# சுமந்திரன் - தவராசாவின் வாதங்களையடுத்து 'உதயன்' இயக்குநர், செய்தி ஆசிரியர் விடுவிப்பு

## யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவு



2020ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளையொட்டி அவருடைய படத்தையும், செய்தியையும் வெளியிட்டதாகக் கூறி, யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தொடுக்கப்பட்ட வழக்கில் இருந்து, 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் மற்றும் செய்தி ஆசிரியர் ஆகியோர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டனர். 11

# பொறுப்புக்கூறலில் உதவக்கூடியதாக இலங்கை மீதான பிரேரணை இல்லை

### இப்படி புலம்புகின்றார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ்

இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள ஐ.நா. பிரேரணை பொறுப்புக்கூறல் முயற்சிகளில் உதவக்கூடியதாக இல்லை என்றும், அரசியல் நோக்கம் கொண்டது என்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஐ.நா. பிரேரணை கடந்த காலங்களில் 11



## மாகாணசபை கொரோனாவை விட ஆபத்தாம்!

இலங்கைக்கு மாகாணசபை முறைமை பொருத்தமற்றது என்ற நிலைப்பாட்டில் மகா சங்கத்தினர் இன்றும் உறுதியாக வுள்ளனர். மாகாணசபை முறைமை என்பது கொரோனா வைரஸை விடவும் பாரதூரமானது என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

இலங்கையில் 11

## தடை விதிப்பது பற்றி பிரி.ஆராய்வு



மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட மேலும் பலருக்கு எதிராக தடைகளை விதிப்பது குறித்து 11

# ஐ.நா. மனித உரிமை ஆணையரை இலங்கைக்கு அழைக்க வேண்டும்

### அரசிடம் பிரதீபா மஹாநாம ஹேவா கோரிக்கை

இலங்கைக்குக் கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாருக்கு அரசு அழைப்புவிடுக்கவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் அனைத்துலக அரசியல் விமர்சகருமான கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: - 11



## இலங்கை மீது சர்வதேச ரீதியான பொறுப்புக்கூறல் நடைமுறையை உறுதிப்படுத்தவேண்டும் அமெரிக்கா

### காங்கிரஸ் உறுப்பினர் டெபோரா ரொஸ் வலியுறுத்து



இலங்கை மீது சர்வதேச ரீதியான பொறுப்புக்கூறல் நடை முறையை உறுதிப்படுத்த அமெரிக்கா முயற்சிக்க வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டெபோரா ரொஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக அவர், அமெரிக்க இராஜாங்க 2

## விஜயகலா மீது நடவடிக்கை!

### சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக காத்திருக்கும் சி.ஐ.டி.



தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது 2

தீபம் கல்வி நிலையம்
யாழ் மாவட்டத்தில் தனித்துவமான முன்னணி பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
A/L 2023 கலை, வர்த்தகப்பிரிவு

வர்த்தகப்பிரிவு
கணக்கீடு K.பாலகஜன் M.com (Acc.Spl.)
பொருளியல் V.ஜெகதீஸ் BA (Hons) Eco. Spl.
வணிகம் S.K.பாலசபேஷ் B.Com (HNDA)

கலைப்பிரிவு
தமிழ் இ.இ. வசீகரன் B.A.
புவியியல் K.T.ஜெராட் B.A. (Hons) Geo.Spl.
அரசியல் R. பாலகாந்தன்
கிறிஸ்தவ நாகரீகம் J.சரோன் B.A (Hons) Chri.Civil Spl.
வரலாறு K.கலைச்சந்திரன் B.A.(Hons), PGDE
ICT N.நிரோஜன் B.Sc in Computer Science

தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்
A/L 2023 அனுமதிகள் வழங்கப்படுகின்றன
இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
077 224 7781 நிர்வாகி

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைக்கு எதிரான வழக்கு தள்ளுபடியாகி விட்டதாமே...? ஏன் அதை இருட்டடிப்புச் செய்து விட்டீர்கள்? உங்கள் எழுத்தில் அது பற்றி வாசிக்கக் காத்திருக்கின்றோம்' – என்ற சாரப்பட கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

வழக்குப் பற்றி மினக்கெட்டு முழு விவரமாக இரண்டு செய்திகளைத் தயார் செய்து தந்த நமது ஆசிரிய பீட ஆஸ்தான செய்தியாளருக்கும் அவற்றில் ஒன்றைத் தன்னும் மாலை வெளியீட்டில் வெளியீடாதமையால் எரிச்சல். விசனமுரைத்தார். கேட்டுப் பேசாமடந்தையாக இருந்தேன்.

இந்த வழக்கு விடயத்தில் இது பிறிதொரு பத்திரிகை விடயம் என்று பார்க்காமல், இது தமிழ் ஊடகத்துறைக்கு எதிரான சிங்களத்தின் நடவடிக்கை என்று கருதி, அதுபற்றிய செய்திகளை வெளியிட்டோம். ஆனால் அதுவே கட்சி அரசியல் விடயமாக மாற்றப்பட்டு, ஒரு பத்திரிகையின் உள்வீட்டு விவகாரமாக வடிவம் எடுத்தமையால், அந்தளவுடன் அதை விடுத்து, பார்வையாளராக இருக்கலாம் என்று நேற்றுப் பட்டது. அதனால் தள்ளி நின்றோம்.

ஆனாலும் சில விடயங்களை மனம் திறந்து எழுத வேண்டிய தேவையை இந்த சட்ட விவகாரம் ஏற்படுத்தியதால் அவற்றை எழுதுகிறேன். செய்தியையும் பிரசுரிக்கிறோம்.

தலைவர் பிரபாகரனின், பிறந்த நாள் பற்றிய செய்தியை வெளியிட்டமைக்காக 'உதயன்' மீது பொலிஸ் பாய்ச்சல் என்ற தகவல் பத்திரிகைச் சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியவை குறித்து குரல் எழுப்பும் எமக்கு இயல்பாக சீற்றத்தை தந்தது. அதனால் அது குறித்து உடனடியாக – உதயனையும் முந்திக் கொண்டு – கண்டன ஆசிரிய தலையங்கம் வரைந்தோம். இதற்காகக் கருத்து வேறுபாடுகளைக் களைந்து, ஊடகத்துறை ஒன்றுபட்டு கிளர்ந்தெழ வேண்டும் என்று கோரினோம். 'உதயன்' அழைத்தால் இந்த வழக்குக்குத் தமது கருத்து வேறுபாட்டைத் தள்ளிவைத்துவிட்டு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகி வாதிட வேண்டும், அதற்குக் கட்டணம் அறவிடக் கூடாது என்று இப்பத்தியில் நானே வலியுறுத்தினேன்.

என் எதிர்பார்ப்புப்படி, வழக்கின் எதிராளிகளான 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனும், உதயனின் செய்தி ஆசிரியராகப் பெயர் குறிப்பிடப்படும் டிலீப் அமுதனும் சுமந்திரனைத் தொடர்பு கொண்டு வழக்கில் தங்களுக்காக முன்னிலையாகக் கோரினார். முதல் தவணை வழக்கு நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயத்தில் கொழும்பில் ஒரு வழக்கில் சுமந்திரன் முன்னிலையாக வேண்டியிருந்தமையால் நீதிமன்றத்தில் பிரசன்னமாகவில்லை. எனினும் தன் சார்பில் கனிஷ்ட சட்டத்தரணி திருக்குமரனை வழக்கை எவ்வாறு கையாள்வது என்று வழிப்படுத்தி ஆலோசனை வழங்கினார் சுமந்திரன். அவர்களும் நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் வழிகாட்டலில் இரண்டு எதிராளிகள் சார்பிலும் தாங்கள் ஆஜராகின்றனர் என்றே பதிவு செய்தனர். ஆனால் அடுத்த நாள், காலையில் வெளியான 'உதயன்' நாளிதழைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதற்குள் உதயனின் அரசியல் குசும்புத்தனம் கொப்பளிக்கத் தொடங்கி விட்டது என்று எனக்குத் தோன்றியது. அந்த வழக்குக்கும் சுமந்திரனுக்கும் தொடர்பே இல்லை என்று காட்டுவது போல வேண்டுமென்றே செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அதற்குப் பின்னர் உதயன் நிர்வாக இயங்குநர் சரவணபவனை தனிப்பட்ட முறையில் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இது தொடர்பில் என் அதிருப்தியை நேரில் சுட்டிக்காட்டினேன். எனக்குத் தெரிந்த ஒரு மூத்த ஊடகவியலாளர் மூலமும் அவருக்குச் சுட்டிக்காட்டச் செய்தேன். இரண்டு தடவைகளும், அப்படிச் செய்தி தமது நாளிதழில் பிரசுரமானது தமக்குத் தெரியாமல் நடந்த விவகாரம் போல அவர் காட்டிக் கொண்டார். அது உண்மையாகவும் இருக்கலாம். ஏனெனில் அதற்குப் பின்னர் இந்த வழக்கு விடயம் தொடர்பாக இரண்டு எதிராளிகளும் (சரவணபவனும் டிலீப் அமுதனும்) பொலிஸாருக்கு வாக்குமூலம் அளிக்க வேண்டியிருந்தது. இருவரும் தொலைபேசியில் தம்முடன் தொடர்பு கொண்டனர் என்றும், வாக்குமூலத்தில் என்ன கேள்வி கேட்பார்கள், என்ன விடயத்துக்கு எப்படிப் பதில் சொல்ல வேண்டும் என்ற சட்ட ஆலோசனைகளை நீண்ட நேரமாக தான் வழங்கினார் என்றும் சுமந்திரன் என்னிடம் கூறியிருந்தார். முதல் தவணை வழக்குப் பற்றிய செய்தியை உதயன் பிரசுரித்த விதம் குறித்தும் சுமந்திரனுக்கும் அதிருப்தி இருந்திருக்கக் கூடும்.

ஆனாலும் அவர் *"நான் பேப்பரில் செய்தி வருவதற்காக அந்த வழக்கைச் செய்யவில்லையே... அது ஒரு விடயமே அல்ல. என் சேவையை அந்த இரு எதிராளிகளும் கேட்டிருக்கின்றனர். சட்டத்தரணி என்ற முறையில் முழு நேர்மையுடன் அதனை வழங்குகிறேன். அவர்கள் செய்தி எப்படி பிரசுரித்தாலும் நான் அலட்டிக் கொள்ளப் போவதில்லை."* – என்றார் அவர்.

இந்தப் பின்னணியில்தான் வழக்கு நேற்று வந்தது. முதலாவது எதிராளியான சரவணபவன், தான் முதலில் அழைத்த ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை தன் சார்பில் அழைக்காமல் தவிர்த்துக்கொண்டார். அது பற்றி சுமந்திரனுக்கு எதுவும் கூறாமல் கொழும்பிலிருந்து மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவை அழைத்து வந்தார். ஆனால் உதயன் செய்தி ஆசிரியராகக் குறிப்பிடப்படும் டிலீப் அமுதன் ஒற்றைக் காலில் நின்று சுமந்திரனை தனது சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் முன்னிலையாக வைத்தார்.

இன்றைய நிலையில் வழக்கின் எதிராளிகள் அல்லது சந்தேக நபர்கள் என்ற கோதாவில் இருந்து சரவணபவனும், டிலீப் அமுதனும் விடுவிக்கப்பட்டு விட்டனர். ஆனாலும் வழக்குத் தள்ளப்படவில்லை. இன்னொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மீண்டும் அவர்களில் ஒருவரோ, இருவருமோ, அல்லது வேறு யாருமோ இதே விடயத்துக்காக சட்டத்தின் முன் நிறுத்தப்படலாம்.

ஆனால், தனக்காக அல்லாமல் வழக்கில் பிறிதொருவருக்காக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனை முன்னிலையாக அனுமதிப்பதன் மூலம் உதயன் நிர்வாக இயக்குநர் சரவணபவன் தன் தலையில் தானே மண் அள்ளிக்கொட்டப்போகின்றார் என எனக்குள் எண்ணினேன். அதுதான் கடைசியாக நடந்து முடிந்திருக்கின்றது. அது சரவணபவனுக்கே புரிந்திருக்குமோ தெரியாது. எனினும் இப்போது விடயம் Too late.

இப்போது உதயனுக்கு எதிராக பத்துக்கு மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றில் பல டக்ளஸ் தேவானந்தா தொடுத்தவை. பல விசாரணைக் கட்டத்தில் உள்ளன. இந்த வழக்குகள் எவற்றுக்கும் – டக்ளஸின் வழக்குகளுக்குக் கூட – சரவணபவன் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. டக்ளஸின் சட்டத்தரணிகளுக்கும் கூட தெரியாத ஒரு விடயம் இருந்தது. இந்த வழக்குகளுக்கு இவர்தான் செய்தி ஆசிரியர், இவர்தான் நிர்வாக ஆசிரியர் என்று ஒருவரை பத்திரிகை நிறுவனம் கடிதம் கொடுத்து அனுப்பும். நீதிமன்றமும், எதிரணி சட்டத்தரணிகளும் அதனை ஏற்று வழக்குகளை நடத்துவர். அவை நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் முறைமை அதுவல்ல. நேற்றைய வழக்கில் செய்தி ஆசிரியர் என்று பெயர் குறிப்பிடப்படும் டிலீப் அமுதனுக்கு மட்டுமே முன்னிலையாக வேண்டிய தேவை சுமந்திரனுக்கும் ஏற்பட்ட போது, அதனை முன்னிறுத்தி விடயத்தைப் போட்டுடைத்து விட்டார் சுமந்திரன்.

ஒவ்வொரு ஊடக நிறுவனமும் – குறிப்பாகப் பத்திரிகையும் – பத்திரிகையியல் சட்டப்படி பத்திரிகை ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என மூவரையும் பெயர் சுட்டி அறிவித்து, ஒரு நீதிவான் முன் சத்தியப்பிரமாணம் செய்து, பிரதிக்ஞைப் படிவத்தை நிரப்பிக்கொடுத்திருக்க வேண்டும். செய்திகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட செய்திக்கு செய்தியாளர் பெயர் பிரசுரித்திருந்தால் அவரும், பிரதிக்ஞை செய்த ஆசிரியர், அச்சிட்டவர், வெளியிட்டவர் ஆகிய நால்வரே பொறுப்பாவார். இதை நீதிமன்றத் தில் பகிரங்கமாகக் குறிப்பிட்டு, இந்த நான்கு பிரிவுக்குள்ளும் வராத எனது கட்சிக்காரரை எப்படி நீதிமன்றுக்குக் கொண்டு வர முடியும் என சுமந்திரன் எழுப்பிய கேள்வியை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. அது மட்டுமல்ல, அப்படி பிரதிக்ஞை செய்தவர்களைத் தேடியறிந்து சட்ட நடவடிக்கை எடுப்பதாயின் அவர்களுடன் விடயத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று பொலிஸாரை இறுக்கி விட்டுவிட்டது நீதிமன்றம்.

சுமந்திரன், காட்டிக் கொடுத்து, அம்பலமாக்கி விட்ட இந்த சட்ட விடயத்தால் உதயனுக்கும் அதன் நிர்வாக இயக்குநருக்கும் பல சிக்கல்கள் இருக்கும் என்றே தோன்றுகின்றது.

டக்ளஸும் கூட இனிமேல் இதே பிடியைத்தான் பிடிப்பார் என்று தோன்றுகின்றது. இன்றைய நிலையில் உதயனின் ஆசிரியர், அச்சிடுவோர், வெளியிடுவோர் ஆகிய மூன்று பதவிகளையும் வைத்திருப்பவர் சரவணபவன்தான். இனிமேல் எல்லா வழக்குகளுக்கும் அவரே நேரில் இழுபட வேண்டியிருக்கும் என்றே எனக்குத் தோன்றுகின்றது. யாரோ ஒருவருக்கு இவர் ஆசிரியர், இவர் செய்தி ஆசிரியர், இவர் நிர்வாக ஆசிரியர் என்று குறிப்பிட்டு நீதிமன்றுக்குக் கடிதம் அனுப்பும் 'பாச்சா' சுமந்திரன் போட்டுடைத்த சட்ட உண்மையால் இனிப் பலிக்கப்போவதில்லை என்ற மாதிரித்தான் படுகின்றது.

இனி நேற்றைய வழக்கில் சரவணபவனின் சட்டத்தரணி கே.வி.தவராசா குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் குறித்து சுருக்கமாகக் குறிப்பிடலாம் என நினைக் கிறேன்.

முதலாவது – அவலை நினைத்துக் கொண்டு அவர் உரலை இடித்திருக்கின்றார் என்று தோன்றுகின்றது.

*"புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டாடினால் ஆபத்து என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லவே பிரபாகரனின் படத்துடன் செய்தி பிரசுரிக்கப்பட்டது."* – என்று அவர் நீதிமன்றத்தில் வாதாடுகையில் கூறியிருக்கின்றார். இது 'உதயன்' அச்செய்தியைப் பிரசுரித்த தான நோக்கத்தையே கொச்சைப்படுத் தும் ஒரு மோசமான வாதம் என்பது என் கருத்து. அவரது அந்த வாதம்தான் உதயனின் உண்மையான நிலைப்பாடா என்பதை அப்பத்திரிகை தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் நல்லது.

P2P எழுச்சிப் பேரணியில் உஷாராகச் சென்ற யாழ்.மேயர் வி.மணிவண்ணன், அது குறித்து பொலிஸ் வாக்குமூலம் அளிக்க வேண்டிய தேவை வந்ததும் குத்துக்கரணம் அடித்தார். "நான் ஊர்வலத்தில் போகவில்லை, பருத்தித்துறையில் தெரிந்தவர் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். வழியில் ஊர்வலத்தின் நடுவில் சிக்குண்டமையால், வாகனத்தை விட்டு இறங்கி நடந்து, பருத்தித்துறையில் எனக்கு தெரிந்த வீடு வரை நடந்து சென்றேன்" – எனக் கயிறு விட்ட மாதிரியான நேர்மைத்தனம் இல்லாத வாதம் சட்டத்தரணி தவராசா உதயன் சார்பில் முன்வைத்த இந்த விடயம்.

தான் யாருக்காக முன்னிலையாகின்றாரோ அவரை வழக்கிலிருந்து விடுவிக்கின்றார் என நினைத்துக் கொண்டு அவர் முகத்தில் சேறு வாரிப் பூசிய வேலை என்பது என் கருத்து, அது திறமையான வாதம் என்று அவர் கட்சிக்காரர் மகிழ்ந்து கொண்டாடினால் எனக்கு ஆட்சேபனையில்லை.

அடுத்தது – தலைவர், பிரபாகரனின் பிறந்தநாள் விடயம் குறித்து அன்றைய தினம் செய்தியோ அவரின் படமோ 'காலைக்கதிர்' பிரசுரிக்கவேயில்லை.

ஆனால், தலைவரின் பிறந்தநாளை ஒட்டி அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் தமிழ் எம்.பி. ஒருவர் தமது உரையில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார் என்ற செய்தியை அடுத்தநாள் அவர் படத்துடன் நாம் பிரசுரித்திருந்தோம். நாடாளுமன்றப் பேச்சை தவறின்றி நாம் பிரசுரிப்பதை எந்த நீதிமன்றமும் தடுக்க முடியாது. பொலிஸாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது. அதுதான் சட்ட நிலைமை. நாம் தவறாக செய்தி வெளியிட்டிருந்தால் சபாநாயகர்தான் அது தொடர்பில் கேள்வி எழுப்பமுடியும். நாம் பிரசுரித்த நாடாளுமன்ற உரையை, நாமும் பிரபாகரனின் பிறந்தநாள் விடயத்தை அவரது படத்துடன் செய்தியாக வெளியிட்டிருந்தோம் என்று சுட்டிக்காட்டி, 'உதயன்' மீது நடவடிக்கை, 'காலைக்கதிர்' மீது நடவடிக்கை இல்லை என்ற சாரப்பட வாதம் நடந்த முயன்றமை அபத்தத்திலும் அபத்தம்.

சட்டத்தரணி கே.வி.தவராசா எனது நீண்ட நாள் நண்பர். மதிப்புக்குரியவர். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நான் கடத்தப்பட்டு, பின்னர் அது கைதாக மாற்றப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வாடியபோது அவரும், அவரது துணைவியாரும் எனக்காக நீதிமன்றங்களில முன்னிலையாகி வாதாடியவர்கள். அதற்காக உயர்நீதிமன்றத்துக்கு சுமந்திரனைக் கூட்டி வந்து வாதாட வைத்தவர்கள்.

தமிழரசுக் கட்சிக் கொழும்புக் கிளையில் சுமார் நான்கு வருடங்கள் நாமிருவரும் இரட்டைக்குரல் துப்பாக்கிகள் போன்று செயற்பட்டவர்கள்.

ஊடகவியலாளனாக என் பணியின் சால்பு அவருக்குத் தெரியும். சட்டத்தரணியாக அவர் மாண்பு யாது என்பது எனக்கு விளங்கும்.

இந்த எழுத்தின் நேர்மைத்தனமும் அவருக்குப் புரியும் என நம்புகிறேன்.

– மின்னல் –

## இலங்கை மீது சர்வ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் என்டனி பிலிங்கனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 26 வருட காலப் போரில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தத்தின் அவசியமும் இந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையுடனான இராஜதந்திர உறவுகளின் ஊடாக அமெரிக்கா மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்ட முயற்சிக்க வேண்டும் என்றும் டெபோரா கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை மீதான 2015 ஐ.நா. தீர்மானத்தைக் கொண்டுவருவதில் அமெரிக்காவின் பிரதான வகிபாகம் காணப்படுகின்றது எனவும் டெபோரா ரொஸ், அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு நினைவுபடுத்தியுள்ளார்.

## விஜயகலா மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளதாக சி.ஐ.டியினரால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளதாகவும், ஆனால் இன்னும் அவரின் ஆலோசனை கிடைக்கப் பெறவில்லை என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

2018 ஜுன் 2 ஆம் திகதி, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய விஜயகலா மகேஸ்வரன் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பாக வெளியிட்ட கருத்தொன்று தென்னிலங்கையில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இவர் நாட்டின் அரசமைப்பை மீறி விடுதலைப்புலிகளை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளார் என்று தெரிவித்து சிங்கள ராவய அமைப்பால் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து விசாரணை நடத்திய அதிகாரிகள் விஜயகலா மகேஸ்வரனை 2018 ஒக்டோபர் 8ஆம் திகதி கைதுசெய்தனர். அதன் பின்னர் அன்றைய தினமே நீதிமன்றத்தால் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு மீண்டும் நேற்று கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ரீ ராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கவில்லை என்று சி.ஐ.டியினர் அறிவித்த நிலையில், நீதிவானால் சட்டமா அதிபருக்கு நினைவூட்டும் அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வழக்கை மீண்டும் எதிர்வரும் செப்டம்பர் 10 ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தவுள்ளதாகவும், அன்றைய தினத்தில் விசாரணையின் முன்னேற்றம் குறித்த அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் சி.ஐ. டியினருக்கு அறிவித்துள்ளார்.

# பங்களாதேஷ் சென்றடைந்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ!




பங்களாதேஷ் பிரதமர் கே் ஹசீனாவின் அழைப்பை ஏற்று இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷக் ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

பிரதமர் உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர் யுஎல் 189 ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமானத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை பங்களாதேஷ் நோக்கி பயணமாகினர்.

குறித்த விஜயத்தின் போது பிரதமர், பங்களாதேஷ் குடியரசின் தேசத்தின் தந்தையாக போற்றப்படும் பங்கபந்து ஷெயிக் முஜிபர் ரஹ்மானின் ஜனன தின நூற்றாண்டு விழா மற்றும் பங்களாதேஷின் சுதந்திர பொன் விழா ஆகியவற்றில் கலந்து கொள்ளவுள்ளார்.

பங்கபந்து ஷெயிக் முஜிபர் ரஹ்மானின் ஜனன தின நூற்றாண்டு விழா மற்றும் பங்களாதேஷின் சுதந்திர பொன்விழா ஆகியவற்றை முன்னிட்டு பிரகடனப்படுத்தப்பட்ட 'முஜிப் ஆண்டு' தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பிற்பகல் சிறப்புரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டக்ளஸுடன் பேச நாம் தயாரில்லை!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு நாம் தயாரில்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்தித்து பேச்சில் ஈடுபடப்போகிறார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் தலைவி ஜே.கனகரஞ்சினி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சில் ஈடுபடுவதற்கு ஒரு போதும் நாம் செல்லமாட்டோம்.

அவர்தான், எமது தாய்மாரை நீதிமன்றம் வரை கொண்டு செல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் என்பதுடன் அவரினால் பலர் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சுக்குச் செல்வதற்கு எமக்கு விருப்பமில்லை. இத்தகைய சூழ்நிலையிலேயே சர்வதேசத்திடம் எமக்கான நீதி வேண்டி போராடி வருகின்றோம்.

இதேவேளை இறுதி யுத்தத்தை நடத்தியவர்கள் ஆட்சிக்கு வருகின்றார்கள். அவர்களிடம் கையளித்த எமது உறவுகள் தொடர்பாகத் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் அதுவும் இதுவரை காலமும் நிறைவேறவில்லை. – என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

# ரஞ்சனின் ரிட் மனு வாதங்கள் நிறைவு!

## எழுத்து மூல சமர்ப்பணங்களுக்கு கால அவகாசம்

தனது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதை தடுக்கும் வகையில் எழுத்தாணை ஒன்றினை பிறப்பிக்குமாறு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள ரிட் மனு தொடர்பிலான பரிசீலனையில், வாய் மொழி மூல வாதங்கள் நிறைவு பெற்றுள்ளன.

இந் நிலையில், மனுதாரர் மற்றும் பிரதிவாதி தரப்பு சார்பில் எழுத்துமூல சமர்ப்பணங்களை எதிர்வரும் 23 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் இரு தரப்பினருக்கும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் பிறப்பித்து குறித்த மனுவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள அனுமதியளிப்பதா, இல்லையா என்பது தொடர்பிலான தீர்ப்பை அறிவிப்பதற்கான திகதியை தீர்மானிப்பதற்காக மனுவை மீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயா துன்னே கொரேயா ஆகியோர் அடங்கிய குழாம், ரஞ்சனின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடித்தது.

முன்னதாக தனது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கடந்த 2 ஆம் திகதி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

மேன் முறையீட்டு நீதிமன்றில் அவர் இந்த ரிட் மனுவை (எழுத்தாணை மனு) தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி தினேஷ் விதான பத்திரண ஊடாக தாக்கல் செய்துள்ள இம்மனுவில், பிரதிவாதிகளாக நாடாளுமன்ற செயலாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த மனுவில், கடந்த ஜனவரி 12 ஆம் திகதி, நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக தனக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையை உயர் நீதிமன்றம் விதித்துள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான பின்னணியில், தனக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதி இல்லை என சட்ட மா அதிபர் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளதாக கடந்த ஜனவரி 19 ஆம் திகதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன எனவும், எனினும் நாடாளுமன்ற செயலர் இதுவரை தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என நம்பகரமான தகவல்கள் ஊடாக தான் அறிந்துகொண்டார் எனவும் குறித்த மனுவில் ரஞ்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந் நிலையிலேயே தனது நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதை தடுக்கும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு குறித்த ரிட் மனுவூடாக ரஞ்சன் கோரியுள்ளார்.

இம்மனு தொடர்பில் பிரதிவாதி தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இந்திக்க தேமுனி டி சில்வாவும் மனுதாரர் ரஞ்சன் ராமநாயக்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆகியோர் வாதங்களை முன்வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மஸ்கெலிய இந்து கோவில் தற்காலிகமாகப் பூட்டப்பட்டது!

## ஐயர் உள்ளிட்ட நால்வருக்குத் தொற்று

மஸ்கெலியாவிலுள்ள இந்துக் கோவில் ஒன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐயர் உள்ளிட்ட நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தே சுகாதார தரப்பினரால் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# பண்டாரகம பிரதேசசபை உறுப்பினருக்கு மறியல்!

கைது செய்யப்பட்டிருந்த பண்டாரகம பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அங்கவீனமடைந்த இராணுவ வீரர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்தே எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் அவர் வைக்கப்பட்டுள்ளார்.

# ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கைகள்!

தேசிய, மாகாணப் பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தேசிய, மாகாணப் பாடசாலைகளில் நிலவிவரும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவுகின்ற தகவல் தொழில்நுட்பம், மனைப்பொருளியல், சித்திரப் பாடங்களில் காணப்படும் வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளன.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தவக்காலச் சிந்தனை



## நல்லதைச் செய்ய முற்படுவோம்

சட்டங்களைக் கையிலெடுப்போர் கடவுளை நம்புவதுமில்லை மனிதரை மதிப்பதுமில்லை. திருச் சட்டத்திலே கூறப்பட்டவற்றைக் கடைப்பிடிப்பதிலே பரிசேயர்களும் மதத் தலைவர்களும் குறியாக இருந்தார்கள். காலத்தில் வெளிப்படும் அடையாளங்களை, கண்டுணர முடியாதவர்களாகச் செயற்பட்டார்கள். நல்லது நடைபெற்ற வேளையில் கூட, அது இறைவனுக்கு எதிரான செயல் என்று பரிசேயக் கட்சியினர் கருதினார்கள் அதனாலே மக்கள் இவர்களுக்கு பயந்தே வாழ்ந்தார்கள்.

இறை தன்மை இயேசுவிலே வெளிப்பட்டதை சாதாரண பாமர மக்கள் அறிந்து கொண்டார்கள். இயேசு வர வேண்டிய இறைவாக்கினராக இருக்கலாம் என்று உணர்ந்தார்கள். மெசியா வருவார் என்று பரிசேயரும் எதிர்பார்த்தார்கள், அது யேசுவாகத் தான் இருக்கும் என்று நம்ப மறுத்தார்கள். அதனாலே இயேசு செய்யும் ஒவ்வொன்றிலும் குற்றங்காண முற்பட்டார்கள். சட்டங்கள் மனிதர் தவறு செய்வதைத் தடுக்க உதவுகின்றன. மனிதர்களுக்காகவே சட்டங்கள், சட்டங்களைக் கொண்டு மனிதர்களை அடக்குவதைவிடுத்து, மனிதனை மனிதனாக வாழச் செய்யவே சட்டங்கள் உதவ வேண்டும். குற்றவாழியைக் கண்டு பிடித்து தண்டனை வழங்குவதை விட, குற்றங்கள் ஏற்படாமல் தடுப்பனவாகவே சட்டங்கள் இருக்க வேண்டும்.

இயேசு ஓய்வு நாளில் குணமாக்கிய சம்பவத்தை பரிசேயர் சட்டத்தின் பார்வையில் குற்றமாகக் கருதினர் இயேசு பரிசேயர்களுக்கு பாடம்புகட்ட, உங்களுடைய வளர்ப்புப் பிராணி கிணற்றில் விழுந்து விட்டால் ஓய்வு நாளென்று நீங்கள் காப்பாற்றாமலா இருப்பீர்கள்? நீங்கள் சட்டத்தைக் கடைப்பிடிப்பதில்லை. ஆனால் அது எப்படி மீறப்படுகின்றது என்று கவனிப்பது முறையாகுமா? இவ்வாறு மனிதர்கள் தம்மைத் திருத்துவதை விடுத்து, அடுத்தவரிலே குறைகாண்பதை பெரிதாக எண்ணிக் கொள்கின்றார்கள். உன் கண்களில் உள்ள விட்டத்தை எடுத்து விட்டு அடுத்தவர் கண்ணிலுள்ள தூசியைப் பார்க்க வேண்டும் அதுவே தகுந்ததாகும். கிராமத்திலே சொல்லுவார்கள் உலக்கை போறதைப் பார்க்காமல் ஊசி போறதை பெரிதுபடுத்தும் நிலையாகும். தீமைக்கான பலவற்றைக் காட்டி நன்மையை வெளிப்படுத்தப் போகிறோம் என்ற நிலையிலே காட்சி ஊடகங்கள் செயல்படுகின்றன. நவீன உலகின் போக்கு இப்படியாகவே இருக்கின்றது. நல்லவர்கள் எனப்படுபவர்களும் நமக்கேன் வீண் வம்பு என்று ஒதுங்கியுள்ளார்கள். சமுதாயம் பாதுகாக்கப்பட்டாலே நாளை நல்ல சந்ததியை உருவாக்கலாம். நாமே நல்லது செய்யத் தலைப்படுவோம் நாளொருமேனியாய் நல்லது முறைத்து வளர்ந்து வரும்.

**- அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்**
**ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதித்துறையின் அபத்தப் போக்கு

இலங்கை விவகாரம் இப்போது ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் பெரும் சில்லெடுப்பு விவகாரமாக மாறியிருக்கின்றது.

அடுத்து வரும் தினங்கள் இவ்விடயத்தில் தீர்க்கமான காலமாக அமையப் போவது திண்ணம்.

இந்த விடயத்தில் – யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டவை என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் – சம்பந்தமான பிரச்சினை உள்நாட்டுக்குள் தீர்க்கப்படாமல் சர்வதேச விடயமாக இன்று மாற்றப்பட்டிருக்கின்றது.

இந்தக் கொடூரங்கள் தொடர்பில் தமக்கு நீதி வேண்டும், நியாயம் தேவை, உண்மைகள் அம்பலமாவது அவசியம், பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட வேண்டும், உரிய இழப்பீடுகளை வழங்கி மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்றெல்லாம் குரல் எழுப்பும் தமிழினம் அதற்கான நீதி கோரி சர்வதேசத்திடம் இன்று கையேந்தி நிற்கின்றது.

அதற்குப் பிரதான காரணம் ஒன்றே ஒன்றுதான். அது – இலங்கையில் நீதிமுறைமையின் மீது தமிழர்களுக்கு நம்பிக்கையே இல்லை என்ற ஒரே காரணம்தான். அந்தக் காரணம் மட்டும்தான்.

ஆனால் தமிழர்களின் நீதியை எதிர்பார்க்கும் இந்த அவாவை – நேர்மையான ஆவலை – நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனமாக விமர்சிக்கின்றது பௌத்த, சிங்கள் பேரினவாதம்.

சரி, இவ்வளவு தூரம் இலங்கையின் நீதித்துறை மீது தமிழர்கள் அவநம்பிக்கை கொள்வதற்கு – அவப் பெயர் சூட்டுவதற்கு – ஏன், நீதித்துறையின் கண்ணியம் குறித்துக் குறிப்பிட்டு அதை அவமானப்படுத்துவதற்கு – வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? பிழை எங்கே? அவமானக் குற்றம் சுமத்தும் தமிழர் பக்கத்திலா? அல்லது இலங்கையின் சட்ட முறைமையிலா? அல்லது அந்த சட்டத்தின் கண்ணியத்தைப்பேண வேண்டிய பிரதம நீதியரசர்கள், நீதியரசர்கள், நீதிபதிகள், நீதிவான்கள், சட்டமா அதிபர் உட்பட அரச சட்டத்துறையினர் ஆகியோர் தரப்பிலா? யார் மீது தவறு? அல்லது எவை மீது தவறு?

இனம் சம்பந்தப்பட்ட விடயங்களில் இலங்கை நீதிமன்றங்களின் கடந்த காலத் தீர்ப்புகள், தரவுகள், கட்டளைகள் வரிசைப்படுத்தி சுட்டிக்காட்டப்படுகின்றன. அதனால் தவறுக்கான பொறுப்பு நீதி முறைமையிலும், சட்டத்திலும், அதனை நிலைநிறுத்த வேண்டிய கடப்பாட்டில் இருக்கும் சட்டவாளர்களிலும் சேர்ந்தே கூட்டாக முன்வைக்கப்படுகின்றது.

சட்டம் சொல்லுகிறது என்பதற்காக நீதித்துறையினர் கண் மூடிக் கொண்டு உத்தரவுகளை வழங்கக் கூடாது. ஆட்சித் தரப்பின் ஏவல் அலகான பொலிஸ் கூறுகின்றது என்பதற்காக நீதித்துறை கண்ணைக் கட்டிக் கொண்டு உத்தரவுகளை வழங்கக் கூடாது.

சட்டங்களிலும், சட்டமுறைமைகளிலும், சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் சம்பந்தப்படட பொலிஸார் தரப்பிலும், அரச தரப்பு சட்டவாளர்களாகிய சட்டமா அதிபர் தரப்பிலும் கூட தவறுகள் தாராளமாக இருக்கலாம். இருக்கின்றன.

ஆனால், அவை எல்லாம் அரங்கேறுவதற்கான 'போத்தல் வாயிலாக' ஏதோ ஒரு நீதிமன்றம்தான் இருக்கின்றது என்பது மறுக்க – மறைக்க – கூடியதல்ல.

'சட்டம் எங்கள் கைகளைக் கட்டி இருக்கின்றது. இந்த வரையறைக்குள், இப்படித்தான் நாம் உத்தரவிட முடியும், உத்தரவிட வேண்டும்' என்றெல்லாம் நீதித்துறையினர், குறிப்பாக நீதிபதி ஸ்தாபனத்தில் இருப்பவர்கள் வில்லங்க வியாக்கியானம் கூறிக் கொண்டு, தார்மீகப் பொறுப்புத் துறந்து – விவஸ்தை கெட்டு – விட்டேத்தியாக – நடந்தால் இலங்கையின் நீதித்துறையின் பெயர் சர்வதேச ரீதியில் 'ரிப்பேர்' ஆகி, இப்படிக் கெட்ட பெயர் சுமப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இப்போது ஒரு திருக்கூத்து அடிக்கடி அரங்கேறுகின்றது. தமிழர்களின் நீதி, நியாயமான – சட்டபூர்வமான – அடிப்படை உரிமைகளான – ஒன்று கூடும் சுதந்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் ஒரேயடிகாக மறுக்கப்படுகின்றன. தமிழர்கள் ஜனநாயக முறையில் தமது அரசியல் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு அஹிம்சை ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸார் நீதிமன்ற உத்தரவு ஒன்றைக் கொண்டு வந்து அதைத் தடைசெய்கின்றார்கள். நேற்று மட்டக்களப்பிலும் இது திரும்பவும் நடந்தது.

ஆக, தமிழர்களின் நீதி, நியாயமான – ஜனநாயக ரீதியிலான – போராட்டங்களை பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு தனது ஏவல் படையான பொலிஸைக் கொண்டு முறையற்ற விதத்தில் அடக்கும் அபத்த பணிக்கு ஒவ்வொரு தடவையும் தன்னையே அறியாமல் நீதித்துறை அநீதியாகத் துணைபோய்க் கொண்டிருக்கின்றது.

எவ்வளவு காலத்துக்கு இந்த அநீதி தொடரப்போகிறது? நீதித்துறை எப்போது நீதி, நியாயமாக நடக்கப்போகின்றது? எப்போது அது விழித்தெழப் போகின்றது? அதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?

அதுவரை இலங்கை நீதித்துறையின் பெயர் சர்வதேச ரீதியிலும் நாறடிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

## இலங்கையிலிருந்து கச்சதீசை மீட்க இந்தியா நடவடிக்கை!



இலங்கையிடமிருந்து கச்சதீவினை மீட்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இந்திய மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்து துறை இணை அமைச்சர் வி கே சிங் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகள் குறித்து பேசப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாட்டில் 8 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது!

நாட்டில் 8 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மாத்திரம் 9 ஆயிரத்து 657 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் புதன்கிழமை வரை வரையான காலப்பகுதியில் நாட்டில் 8 லட்சத்து 6 ஆயிரத்து 449 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, கொரோனா அபாயப்பகுதியில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தொடர்ந்தும் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணப் பல்கலையில் நேற்று இரத்ததான நிகழ்வு









யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு நேற்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 10 மணிக்கு, பல்கலைக்கழக நலன்புரிக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், பணியாளர்கள் உட்படப் பெருமளவானவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

## இருநூறு யானைகள் வரையில் அம்பாறைப் பகுதிக்குப் படையெடுப்பு



நூற்றுக்கணக்கான யானை கூட்டம் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் வைக்கப்பட்ட தீ காரணமாக மக்கள் குடியிருப்புகளை நோக்கி நடமாடுவதனால் அவற்றை விரட்டுவதற்காக வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மாலை திடீரென சம்மாந்துறை ஊடாக காரைதீவு, மாவடிப்பள்ளி, நிந்தவூர், பகுதிகளை ஊடறுத்து ஊருக்குள் பிரவே சிக்க முயன்ற சுமார் 188 இற்கும் அதிகளவான யானைகளை கட்டுப்படுத்தி அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்காக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாலை முதல் இரவு வரை குறித்த யானைகள் நகர்ந்து செல்லாமல் ஒரு இடத்தில் கூடி நிற்கின்றமை மற்றும் கலவரப்பட்டமைதொடர்பில் வனவிலங்கு அதிகாரிகளுக்கு பொதுமக்களால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது குறித்த யானைகளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்காக வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யானைக்கூட்டத்தின் நகர்வுகளை அவதானித்து நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதனால் யானைக்கூட்டத்தை பார்வையிட மாவடிப்பள்ளி பாலம், காரைதீவு ,நிந்தவூர், சம்மாந்துறை, பகுதிகளில் பொதுமக்கள் குவிந்து நின்று யானைக்கூட்டத்தை அவதானிப்பதை காணமுடிந்தது.யானை கூட்டத்தினை பார்வையிட வரும் மக்களால் போக்குவரத்து நெரிசல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

# விவசாய அபிவிருத்திக்காக வன்னிக்கு 300 கோடி ரூபா!

## மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு



வன்னியில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக 331.4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கலந்துரையாடல், மாவட்ட செயலகக் கேட்போர் கூட்டத்தில் அமைச்சரின் பங்கேற்புடன் கடந்தவியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் –

விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்காக வன்னி மாவட்டத்திற்கு இவ்வருடம் மூவாயிரத்து 331.4 கோடி ரூபா நிதி ஒதுக்கியுள்ளோம்.

இதன்படி, வவுனியா மாவட்டதிற்கு 135.2 கோடி முல்லைத்தீவுக்கு 169.9 கோடி மன்னார் மாவட்டத்திற்கு 26.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதியானது, விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய திணைக்களங்கள் ஊடாகச் செயற்படுத்தப்படும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வன்னியில் விவசாயப் பயிர்கள் யானைகளால் சேதமாக்கப்படும் நிலையில், இதனைத் தடுப்பதற்காக யானை வேலிகளை அமைத்து நிரந்தரத் தீர்வை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனால் கோரப்பட்டது.

அத்துடன், வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களங்களால் பொதுமக்களின் காணிகள் எல்லையிடப்படுவது தொடர்பாகவும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக, எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள விசேட கலந்துரையாடலில் விரிவாக ஆராய்ந்து தீர்மானம் எடுக்கமுடியும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

# நஞ்சற்ற விவசாய உணவு உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டங்கள்





மட்டக்களப்பு, மார்ச் 20

இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களது நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக சேதன முறையில் நஞ்சற்ற விவசாய உணவு உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் தேசிய ரீதியில் விவசாய அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கிழக்குமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சேதன முறையிலான விவசாய நடவடிக்கையினை மட்டக்களப்பு மாவட்டத்திலும் முன்னெடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களில் சேதனை முறையில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கான மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண விவசாய கால்நடை, நீர்ப்பாசன மீன்பிடி உணவு வழங்கள் மற்றும் விநியோக அமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடல் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வட்டுக்கோட்டையில் தபாலகம் திறப்பு!





புதிதாக அமைக்கப்பட்ட வட்டுக்கோட்டை அஞ்சல் அலுவலகம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஒரு கோடியே 16 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குறித்த அஞ்சல் அலுவலகம் அஞ்சல்துறை அபிவிருத்து ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சல் அலுவலகத் திறப்பு நிகழ்வில் அஞ்சல் துறை அமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அஞ்சல் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில், ஊடகம், தபால்துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஜெகவீர நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் வடக்கு மாகாண தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சுகாதார முறைமீறிய மேலும் மூவர் கைது!

சுகாதார வழிமுறைகளை பின்பற்றத் தவறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பேணத்தவறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் சுகாதார வழிமுறைகளை பின்பற்ற தவறிய மூவாயிரத்து 363 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.




**ஆடுகளை பாதுகாக்க இரண்டு வகையான வீட்டு மேலாண்மை வழிமுறைகள் உள்ளன.**

**ஆழ்கூள முறை**

**உயர் மட்ட தரை முறை**

**ஆழ்கூள முறை**

இந்த முறையில் கொட்டகை அமைக்க தரையில் 6 செ.மீ. உயரத்திற்கு கடலைப் பொட்டு, மரத்தூள் மற்றும் நெல் உமி ஆகியவற்றை இட வேண்டும். இரண்டு வாரத்திற்கு ஒரு முறை புது கூளம் போடவேண்டும். இம்முறையில் உண்ணி மற்றும் பேன் தாக்கம் இல்லாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். இதில் ஆடு ஒன்றுக்கு 15 சதுர அடி இடம் தேவைப்படும்.

பலத்த மழைக்காலத்தில், ஆழ்கூளப்பொருள்கள் அதிக ஈரத்தன்மையுடன் இருப்பின் அமோனியா வாயு உற்பத்தி ஆகும். ஆகவே அதிகம் ஈரம்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**உயர் மட்ட தரை முறை**

இந்த முறையில் கொட்டகை அமைக்க தரையிலிருந்து 3–4 அடி உயரத்தில் மரப் பலகை அல்லது கம்பி வலைகளை கொண்டு அமைக்கலாம். இந்த முறையில் ஒட்டுண்ணி தொல்லைகள் மிகவும் குறைவாக இருக்கும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# 29 கிலோ கிராம் கஞ்சாவுடன் கதிர்காமத்தில் ஒருவர் கைது!

கதிர்காமம் பகுதியில் 29 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாப் போதைப் பொருளை வைத்திருந்தமை தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோதமிகம பகுதியில் குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கோதமிகம பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவரிடமிருந்து 29 கிலோ 350 கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கதிர்காமம் பொலிஸார் சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தலைமன்னார் விபத்தில் காயமடைந்த இருவர் தொடர்ந்தும் அவசரசிகிச்சையில்!

மன்னார் – தலைமன்னார் வாகன விபத்தில் காயமடைந்தவர்களில் இருவர் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், காயமடைந்த ஏனையவர்கள் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தலைமன்னாரில் கடந்த 16ஆம் திகதி ரயிலுடன் பஸ் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தமையுடன், 22 பேர் வரையில் காயமடைந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**



# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1.கேள்வி:-** இந்த நூற்றாண்டின் பெரிய அதிசயமாய் வெளிக்கிரகவாசிகளின் தொடர்புதான் இருக்கப் போகிறது என்று முன்பு பதில் சொல்லியிருந்தீர்கள். இதுபற்றிச் சொல்ல நீங்கள் என்ன விண்வெளி ஆராய்ச்சியாளரா? அறிவியல் சார்ந்த இந்த விடயத்தையும் உங்கள் இராமாயணம் என்று நினைத்துவிட்டீர்களா?

**பதில்:-** விஞ்ஞானம் படித்தவன் தமிழ் பற்றிப் பேசினால் எல்லோரும் புகழ்கிறீர்கள். தமிழ் படித்தவன் விஞ்ஞானம் பற்றிப் பேசினால்த்தான் உங்கள் எல்லோருக்கும் கோபம் வருகிறது. இப்போதான் உலகத் தகவல் களஞ்சியமான 'இணையம்' நம் கையில் இருக்கிறதே! அதற்குள் சென்றால் அவரவர் தத்தமக்கு விருப்பமான துறைகளில் அடிவேரிலிருந்து நுனி இலைவரையும் விடயங்களைத் தேடமுடிகிறது. வெளிக்கிரகவாசிகள் பற்றிய செய்திகளும் அங்கு தாராளமாய்த் தமிழிலும் பதிவாகியுள்ளன. அங்கிருந்துதான் மேல் விடயம் சம்பந்தமான செய்திகள் பற்றி நான் அறிந்து கொள்கிறேன்.

அச்செய்திகள் பெரும் ஆச்சரியம் ஊட்டுவனவாய் இருக்கின்றன. வெளிக்கிரகவாசிகள் பற்றிய பல செய்திகளும் தரவுகளும் சான்றுகளும் ஏற்கனவே நம் பூமிக்கு நிறையவே கிடைத்துவிட்டனவாம். வழமையான தம்முடைய மேலாதிக்கப் போக்கின்படி வல்லரசுகள் அச்செய்திகளைத் தமதாக்கிக் கொண்டு உலகிற்கு வெளியிடாமல் வைத்திருக்கின்றனவாம். வெளிக்கிரகவாசிகளை ஆங்கிலத்தில் 'ஏலியன்கள்' என்கிறார்கள். (ஆங்கிலம்தானா?) ஏலியன்களில் ஓரிருவரை நம்மவர்கள் பிடித்து வைத்திருப்பதாகவும், வெளிக்கிரகவாசிகளோடு தொடர்பினை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூட ஊகச்செய்திகள் பல வெளியாகியிருக்கின்றன.

அதுபோலவே நமது பூமியைச் சார்ந்த மனிதர்களையும் வெளிக்கிரகவாசிகள் இங்கு வந்து பிடித்துச் செல்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. உலகில் ஒவ்வோர் ஆண்டும் காணாமல் போவோர் தொகையில் கணிசமான அளவினர் எப்படிக் காணாமல் போகின்றனர் என்பது பற்றி ஒருவருக்கும் தெரியாமலே இருப்பதாய் ஆய்வுகள் கூறுகின்றன. அத்தகையவர்களும் ஆங்காங்கே ஏலியன்களால்த்தான் பிடித்துச் செல்லப்படுவதாகவும் ஆய்வாளர்கள் மத்தியில் ஒரு கருத்து உண்டு. (இலங்கை அரசுக்கு இது தெரிந்தால், காணாமல் போனவர்களை ஏலியன்கள்தான் பிடித்துச் சென்றுவிட்டனர் என்று சொல்லிவிடப் போகிறார்கள்.) சில ஆண்டுகளுக்கு முன்பு நூற்றுக்கணக்கான பயணிகளுடன் காணாமல் போய், இன்றுவரை எதுவித செய்தியும் தெரியாமல் இருக்கின்ற மலேசிய விமானத்தைக் கூட வெளிக்கிரகவாசிகள்தான் கடத்திச் சென்றுவிட்டதாகவும் சில அறிஞர்கள் சத்தியம் பண்ணிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் இப்படி எத்தனையோ சொல்லலாம்.

'ஹிலாரி கிளிங்டன்' அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நின்றபோது தான் வெற்றிபெற்றால் வெளிக்கிரகவாசிகள் பற்றிய செய்திகளை வெளியிடுவேன் என்று கூறியிருந்தார். (அதனால்தான் தோற்றாரோ என்னவோ?) நமது பூமியை ஏலியன்களுடைய கரங்கள் சுற்றி வளைக்கத் தொடங்கிவிட்டன என்பது மட்டும் உண்மை.

திடீர் திடீரெனப் பூமியைத் தாக்கும் எயிட்ஸ், கொரோனா போன்ற கிருமிகள் கூட வெளிக்கிரகவாசிகளின் உபயமாயும் ஏன் இருக்கக்கூடாது? என்ற கேள்வியும் எழுகிறது. (இச்செய்தியால் சீனா மகிழ்ந்து எனக்கு விருதளிக்கவும் வாய்ப்பிருக்கிறது.)

உங்களுக்கு ஒன்று தெரியுமா? நமது சங்க இலக்கியக் காலத்திலிருந்தே தமிழ் இலக்கியங்களில் 'ஏலியன்கள்' பற்றிய செய்திகள் பல பதிவாகியிருக்கின்றன. அதை நான் சொன்னால் நீங்கள் நம்பவா போகிறீர்கள்?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ அட! குடுமியர் அடிச்சார் பார் ஒரு சிக்ஸர்!**




**2. கேள்வி:-** இந்தியத் தூதரின் வடக்குக் கிழக்குப் பயணம் பற்றி பேரினவாதிகள் பலர் கொதிக்கின்றார்களே?

**பதில் :-** பிராந்தியத்தில் இந்தியா பெற்றிருக்கும் பலத்தால் வந்த அதிகாரத்தைத் தூதர் காட்டுகிறார். அதைப் பார்த்துப் பிழையென்று கொதிக்கும் பேரினவாதிகள் இலங்கை அளவில் தம் அதிகாரத்தை வைத்து சிற்றினத்தார்க்கு தாம் செய்த அதிகார மீறல்களை நினைத்துப் பார்க்கவேண்டும்.

'வலியார் முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லுமிடத்து' என்ற வள்ளுவரின் ஆலோசனையை இவர்களுக்கு யாரும் சொல்லவேண்டும்.



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ மாமியார் உடைத்தால் மண்குடம். மருமகள் உடைத்தால் பொன்குடமா?**

**3.கேள்வி:-** வேலன்சுவாமி இல்லாத அரசியல் ஊர்வலங்களும் கூட்டங்களும் இல்லை எனும்படி ஆகிவிட்டதே. அவர் அரசியலில் நிலைக்கப் போகிறாரா? ஆன்மீகத்தில் நிலைக்கப் போகிறாரா?

**பதில் :-** இரண்டிலுமே நிலைக்காமல் விட்டுவிடப் போகிறார் என்பதுதான் என் கவலை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'கோடு போட்டு வாழ்ந்தவர்கள் எத்தனையோ
கொண்ட குறியும் தவறிப் போனவர்கள் எத்தனையோ'**

**4. கேள்வி:-** அம்பிகா செல்வகுமாரின் லண்டன் உண்ணாவிரதம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



**பதில் :-** நினைக்கிற அளவுக்குப் பெரிதாய் ஒன்றும் நடக்கவில்லை. கோரிக்கை வைத்து ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதம் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமலே முடிந்திருக்கிறது. வெறும் உணர்ச்சிவயப்பாட்டால் நடந்த செயற்பாடு. உண்ணாவிரதம் என்பது இலேசான விடயமில்லை. அது உடல் பலத்தால் நிகழ்த்தப்படுவதன்று, ஆன்மபலத்தால் நிகழ்த்தப்படுவது. எல்லோரும் காந்தியாகிவிட முடியாது. விளம்பரத்திற்கு மட்டுமே அம்மையாரின் உண்ணாவிரதம் பயன்பட்டிருக்கிறது. ஆனாலும் இத்தனை நாள் பசிதாங்கிய அம்மையாரின் இனப்பற்றை மட்டும் பாராட்டலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ சோழியன் குடுமி ஒன்றும் சும்மா ஆடவில்லையாக்கும் ஹி..ஹி..**

**5. கேள்வி:-** தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கமுடியுமென்றால் பஸில் ராஜபக்ஷவை ஆதரிப்போம் என சுமந்திரன் பேசியமை பற்றி?

**பதில் :-** இதுவரை பேரினத்தார்தான் 'மித்திரபேதம்' செய்து எம்மைப் பிரித்தாண்டார்கள். இப்பொழுது துணிந்து சுமந்திரன் அந்த வேலையை அவர்களுக்குள் செய்யப் பார்க்கிறார் போல. இது அவரது சொந்த முடிவா? அல்லது பெரிய இடங்கள் ஏதும்



சொன்ன முடிவா? யார் அறிவார் பராபரமே!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ அவர் என்ன செய்தாலும் இவர் பாராட்டத்தான் செய்வார்.**

**6. கேள்வி:-** காணி ஆவணங்களை மின்சாரத்தை நிறுத்தி யாழிலிருந்து அனுராதபுரம் கொண்டு போகப்பட்டதன் இரகசியம் என்ன?

**பதில்:-** இரகசியத்திற்கு இதில் எங்கே இடம் இருக்கிறது? வெற்றுக் காணிகளை இனங்கண்டு வேற்றவரை இங்கே குடியமர்த்த நினைக்கிறார்கள் என, பலரும் சொல்லியிருக்கிறார்கள். மின்சாரம் நிறுத்திய கதையில் எனக்கு நம்பிக்கை இல்லை. எந்த அட்டூழியத்தையும் எவருக்கும் பயப்படாமல் செய்து வரும் அவர்கள் இந்தச் சிறிய காரியத்திற்கா இவ்வளவு முன் ஜாக்கிரதை பண்ணுவார்கள்? அது 'குருடன் பெண்டிலுக்கு அடித்த கதையாக'த்தான் இருக்கும் என்று நம்புகிறேன். கடந்த 30 ஆண்டு போர் அழிவின் அனுபவத்தை நம்மவர்கள் மட்டுமல்ல அவர்களும் இன்னும் பெறவில்லை என்றே தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ பகைவர்களை அழித்தவர்களுக்குப் பகையை அழிக்கத் தெரியவில்லையே.**

**7.கேள்வி:-** கொரோனாத் தடுப்பூசியால் பல பேருக்கு இரத்தம் உறைகிறதாமே?

**பதில் :** இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதாலேயே பல பேருக்கு இரத்தம் உறையப் போகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ மரத்தால விழுந்தவன மாடேறி மிதிச்ச கதைதான்....**

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கடந்த 27 ஆண்டுகளாகத் தொடர்ந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து வருகின்றார். பத்தாண்டுகளுக்கு மேல் அமைச்சராக இருக்கின்றார். ஓர் ஆயுதப் போராளியாக களத்தில் இறங்கிய அவரின் கடந்த காலத்தை ஓர் அரசியல் அவதானியாக நோக்குகின்றார் சட்டத்தரணி செ.ரவீந்திரன். பல பழைய சம்பவங்களையும், நிகழ்வுகளையும் அவர் அசை போடுகின்றார். சில தினங்களுக்கு இக்கட்டுரை தொடராக வெளிவரும்.**

**இது பற்றிய வாசகர்களின் அவதானிப்பு, பிரதிபலிப்பு கருத்துத் தெரிவிப்பு ஆகியவற்றை கட்டுரையின் இறுதியில் பிரசுரிக்கலாம் எனக் கருதுகிறோம்.**

**வாசகர்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை முன்வைக்கலாம்.**

**– ஆசிரியர் –**

# சாணக்கியத்தை இழந்து இணங்கிய அரசியலில் டக்ளஸின் வகிபாகம்

## ஒரு நடுநிலைப் பார்வை



சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(ஆஸ்திரேலியா)

**அங்கம் 04**

(நேற்றைய தொடர்ச்சி)

அந்தக் காலகட்டத்தில் எங்களுக்கு தொலைபேசித் தொடர்புகள்தான், (கைத்தொலைபேசி – குறும் செய்திகள் இல்லாத காலம் ). ஊருக்குத் திரும்பியவுடன், புனர்வாழ்வுக்கழகத்தில் நித்தியின் அபிமானத்துக்குரிய முக்கியமானவர்களை கண்டு, தான் ஜனநாயக அரசியலில் ஈடுபடப்போகிறேன் எனவும், அதற்குத் தனக்கு ஆசீர்வாதங்கள் தரும்படியும் டக்ளஸ் கேட்டுப்பெற்றார்.

அவர்கள் சுட்டிக்காட்டியபடி அப்பொழுது இயங்கிய யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர்களையும் சந்தித்து அறிவுரைகள் கேட்டார். அவர் பகிர்ந்த நிலைப்பாடு நித்தியின் வழியில் தமிழர்களுக்கு விமோசனத்தை பெற்றுத்தர, அவர்களின் தேசியத்தை முன்னெடுப்பேன். இந்திய – இலங்கை ஒப்பந்தம் இந்தவகையில் ஒரு வரப்பிரசாதம், அதன் அடிப்படையில் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' – என்பதாகவிருந்தது.

1987 இன் பின்னரான தமிழ் மக்களின் அவலங்களுக்கெல்லாம் புலிகளும் பிரபாகரனுமே காரணம், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை புறக்கணித்து,



கையில் வந்த சமாதானத்தையும், சுயாட்சியையும் இந்தியாவுக்கெதிரான போரினால் புலிகளும் பிரபாகரனும் பாழடித்தனர், தமிழ் மக்களின் விடுதலைக்கு தனிநாடு என்ற கோரிக்கையை முன்வைத்து முன்னேற முடியாது, அதனை படிப்படியாக ஒப்பந்தத்தின் பலத்தாலும் இந்தியாவின் நட்பினாலும் முன்னேற்றிச் செல்லவேண்டும் என்பது தனது கருத்தென்றார்.

இவ்விடத்தில் ஒரு சம்பவத்திற்காக சிறிது பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

நித்தி தனது நோய்களின் உபாதைகளால் ஜூலை 1980 இல் காலமானார். நித்தியின் கடைசி யாத்திரையில் தமிழ் தேசியத்தை நேசித்த பலர் இந்தியாவின் ஊடாக வந்து கலந்து கொண்டனர். அவருடைய தம்பி சச்சிதானந்தா லண்டனிலிருந்தும் அதேபோல் டக்ளஸும் வந்து சேர்ந்தார்.

டக்ளஸ், நித்தியின் மறைவால் மிகவும் சோகமடைந்திருந்தார் என்பதிலும் இடிந்துவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

முதலாவது பாசம். அடுத்தது தான் அரசியல் வாழ்வில் காலடியெடுக்கும்போது தனது இலட்சிய பிதா கருகிப்போனதின் சோகம்.

நித்தியின் பிரிவின் இறுதிச் சொற்பொழிவை நான் ஆற்றினேன். அதில் டக்ளஸின் பணிகள் பற்றி நித்தியின் எதிர்பார்ப்புகளை குறிப்பிட்டேன். இறுதிச் சடங்கிற்கு பிறகு நான் நித்தியின் தம்பி சச்சி, டக்ளஸ், MIRJE கந்தசாமி மற்றும் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆர்வலர்கள் நித்திக்குப் பின்னர் என்ன செய்வது என்றும் அதில் டக்ளஸின் பங்கு என்னவென்றும் அளவளாவினோம்.

அதற்கு சச்சி, டக்ளஸ் ஒரு பாதையை தேர்ந்தெடுக்கலாம். ஆனால், அவர் முதலில் தனது படிப்பை



முடிக்க வேண்டும் என்பதுதான் தனது அக்கறை என்றார். அதற்கான பண உதவிகள் செய்வேன் என்றும் சொன்னார். ஆனால், டக்ளஸோ அதை விரும்பவில்லை.

அதையடுத்து நித்தியின் கொழும்பில் 17, பிரான்ஸிஸ் வீதி வீட்டை பொறுப்பெடுத்து நிர்வகிக்குமாறு சச்சி, டக்ளஸை கேட்டார்.

ஆயினும் தான் எடுத்த இயக்கப் பொறுப்புக்களால் தன்னால் கொழும்பில் சீவிக்க முடியாது என்பதால் அதை விற்றுவிடுதல் நல்லது என்று டக்ளஸ் அபிப்பிராயப்பட்டார். நல்ல விலைக்கு அந்தவீடு வந்திருந்தாலும், நித்தியின் வீடு ஒரு நல்ல பணிமனையாக பயன்படவேண்டும் என்று நாம் வற்புறுத்தியதில் அதனை சச்சி, தென்னிந்திய திருச்சபைக்கு அதில் ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்ற சம்மதத்தில் விற்றார்.

அதில் வரும் பணத்தில் ஒரு பகுதியை நித்தியின் நினைவில் ஒரு அறக்கட்டளை நிறுவ விரும்பி அதனை நிர்வகிக்குமாறு டக்ளஸை கேட்டார்.

ஏனோ அது பின்னாளில் நிறைவேறவில்லை. நித்தியின் இலட்சியங்களை அவரின் தேசியக் கனவை நிறைவேற்றுவது தனது பணி என்று டக்ளஸ் இயக்க வேலைகளில் ஈடுபட்டார்.

அந்த விருப்பங்களிலும், நித்தியின் புனர்வாழ்வுக்கழகத்தில் ஈடுபட்டவர்களின் நம்பிக்கைக்காகவும் 1990 இல் இந்தியாவிலிருந்து வந்தபோது புனர்வாழ்வுக்கழகத்தில் நெருக்கமாக இயங்கிய பலருடனும், யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவினருடனும் தான், தனது இலட்சியப் பாதையில் தொடர்ந்து போராட விரும்புகிறேன். ஆனால், புலிகள்தான் ஏகோபித்த தலைமை என்ற நிலைப்பாட்டை ஏற்கமுடியாது. ஆனபடியால் அவர்களுடன் பேசி, தானும் தன்தோழர்களும் இயங்க வழிசெய்ய வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தங்களது உயிர்களுக்கு உத்தரவாதம், பிரபாகரனிடமிருந்து பெற்றுத் தர வேண்டும் என்றார். பேசிப் பார்த்தோம்.

ஆனால் புலிகளிடமிருந்து “அவர் செய்யட்டும். மிக விரைவில் அவரைப் போடுவோம்” என்ற பதிலே வந்தது. ஆனால், டக்ளஸ், தன்னை ஒரு மாற்று சக்தியாக நிலைநிறுத்துவேன் என்று பிடி வாதமாக நின்றார்.

அவரை சென்னையிலிருந்து கூட்டி வந்தவர்களின் ஏற்பாட்டில் 1990 இல் சிறிலங்காவின் பா துகாப்பு மந்திரி ரஞ்சன் விஜேரத்தினாவுடனான சந்திப்பு அவருக்கு ஒரு பலத்த திருப்பு முனையாக்கி, அவரை தற்சமயத்தில் அவர் இருக்கும் நிலைக்கு ஏணிப்படிகளை அமைத்தது. அவரை ஓர் எதிர் சக்தியாக உருவாக்கியது. ரஞ்சன் விஜேரத்தினாவும், பிரேமதாஸாவும் தங்களது புலிகளுக்கு எதிரான திட்டத்திற்கு டக்ளஸை ஈடுபடுத்தினர். பெருவாரியான பணமும், தேவையான ஆயுதங்களையும் கொடுத்த இலங்கை அரசு, விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தீவுப் பகுதிகளை பாதுகாக்கும் பொறுப்பை டக்ளஸிடம் கொடுத்தார்கள்.

என்னைப் பொறுத்தளவிலும், அவர் ஆசிகள் கேட்ட புனர்வாழ்வுக்கழகத்தின் ஆர்வலர்களுக்கும் இது பெருத்த ஏமாற்றமாகவும் தமிழ்த்தேசியத்துக்கான சவாலாகவும் இருந்தது.

பிரபாகரன், சாணக்கியனின் அறிவுரைக்கு மாறாக எப்படி மக்களின் ஆர்வத்தை தப்புக் கணக்கு போட்டு, இந்தியப்படைகளுடன் ஒரு யுத்தத்தைதிணித்தாரோ, அதே தப்புக்கணக்கை டக்ளஸும் போட்டு மக்கள் தன்னை ஏற்றுக்கொள்வார்கள் என்றும், தான்தான் புலிகளுக்கு எதிரான ஒரேயொரு மாற்று அரசியல் பாதை, அதில் பயணிக்க வரவேண்டும் என்றும் கோரினார்.

இன்றும் அதனையே தேசியமாக, பெரிதாக இணக்க அல்லது இணங்கிய அரசியலில் விடிவு உண்டு என்று பிரசாரப்படுத்துகிறார்.

டக்ளஸ் ஒரு பண்பாளி, எதிர்த்து வாதாடுவது, எகிறி குதிப்பது அவரது வழமையல்ல. மற்றவரின் கருத்தை கூர்ந்து கேட்பவர். ஆனால், ஏதோ தனது அரசியல்தான் புலிகளின் போராட்டத்துக்கு மாற்றுப்பாதை, தன்னால் மாத்திரமே அதனைத் தரமுடியும் என நம்புகிறார். ஏனெனில் சிங்கள தலைவர்கள் தன்னை நம்புகிறார்கள், தான் சொல்லுகின்ற நியாயங்களால் தன்னிலிருக்கும் நம்பிக்கையில் நாட்டை பிளவுபட விடும் எண்ணம் தனக்கில்லை என்று அவர்களுக்குத் தெரியும். இதனால் தன்னை தமிழரின் முக்கிய பங்காளி (Stake Holder) எனத் தெரிவு செய்தால் பேச்சுகளுக்குத் தெம்பு வரும், அதனால் விடிவு வரும் என்பார். இருக்கலாம்.


90 களின் ஆரம்பத்தில் பிரேமதாஸாவின் அனுசரணையில் தான் ஜனநாயக அரசியலுக்கு இறங்கி, நாடாளுமன்ற தேர்தலில் குதிக்கப் போகிறேன் என்று பழையபடி, நித்தியுடன் இணக்கமாகியிருந்த பலரிடம் ஆசீர்வாதம் வேண்டினார்.

ஜனநாயக வழிக்கு திரும்புவதில் ஆட்சேபனை இல்லை, ஆனால், இந்த இணக்க அரசியல் எந்தளவில் பயன்தரும் என்ற வினாவே அவர் முன்வைக்கப்பட்டது. வடபகுதியின் சுயாட்சிக்கான வழிமுறைக்காகத்தான் இதைச் செய்கிறார் எனவும், நித்தியின் இலட்சியத்தைத் தான் கோட்டை விடப்போவதில்லை என்றும், அது என்றும் தனது இரத்தத்தில் இருக்க வேண்டுமென்பதால் தனது பெயரை கதிரவேலு நித்தியானந்தா தேவானந்தா என்று மாற்றம் செய்து, அந்தப் பெயரிலேயே ஜனநாயக அரசியலில் இறங்குவேன் என்றும் சொல்லி இன்றளவும் அதே பெயரையே சூடியுள்ளார்.

அந்தத் தேர்தலில் புலிகள் ஈடுபடவில்லை. 10,744 வாக்குகள் மட்டும் பெற்று 9 ஆசனங்களை பிடித்தார். அதில் அவரது ஆட்சியிருந்த தீவுப் பகுதிகளிலிருந்து கிடைத்த வாக்குகள் 9,944 அவருக்கு விழுந்த விருப்பு வாக்குகள் 2,091.

பிரேமதாஸாவுடன் இணைந்ததிலிருந்து சந்திரிகா, மஹிந்த ராஜபக்ஷ என்று எல்லா ஜனாதிபதிகளிடமும் நன்மதிப்பு பெற்று, நம்பிக்கையை வளர்த்து, எல்லா நேரங்களிலும் தனிப்பட்ட நட்பையும் நேசத்தையும் பேணி டக்ளஸ் என்றால், ஒரு காரியத்தை நம்பி கொடுக்கலாம் என்று முப்படை தளபதிகளும் ஆமோதிக்கும் அளவுக்கு இணைந்து விட்டவர்.



தமிழ்த் தேசியம், தனி நாடு என்ற அரசியல் கோஷங்களிலும், மாயையிலும் இருந்து தமிழ் அரசியல்வாதிகளை விடுவிக்க வேண்டுமானாலோ அல்லது அவர்களை விரோதப் போக்கிலிருந்து மாற்றி நட்புறவுக்கு கொண்டு வரவேண்டுமானாலோ டக்ளஸ்தான் அதற்குப் பாலம்.

**(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

# சாணக்கியத்தை இழந்து...



(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரும் இல்லையென்றால், தமிழ் மக்களின் அரசியல் பாதை எப்படி போகும் என்று தெரியாது என்று சிங்கள புத்திஜீவிகளும், பத்திரிகை ஆசிரியர்களும் தலையங்கங்கள் தீட்டுமளவுக்கு ஒரு விம்பத்தை அவர்களிடையே அந்த அளவிற்கு வளர்த்தவர்.

ஆலையில்லாத அவர்களிடையே இந்த இலுப்பைப் பூ சர்க்கரையாக இருக்கிறது.

ஆனால், தமிழ் மக்களிடையே அவர்கள் பகுதிகளில் நடந்த அநியாயங்களாலும் ஈ.பி.டி.பி. அரசாங்க படைகளுக்கு கொடுத்த ஒத்துழைப்பாலும், தமிழ்மக்களின் மனதில் நல்லெண்ணத்தை வளர்ப்பது டக்ளஸுக்கு கடினமாயிற்று.

ஏதோ ஒரு வகையில் தனக்கு ஓர் ஆசனத்தையாவது பெற்றுத் தொடர்ச்சியாக 25 வருடங்களுக்கு மேலாக நாடாளுமன்றுக்குச் சென்று, மைத்திரி – ரணில் தவிர்ந்த எல்லா அரசாங்கங்களிலும் மந்திரி பதவி பெற்று, தனக்கு ஆதரவு தந்த மக்களுக்கு அவர்களது வாழ்வதாரம் குறித்து அக்கறை செலுத்தினார்.

ஆனால், தமிழ் மக்களின் விமோசனத்துக்காக நித்தியின் இலட்சியத்தில் எவ்வளவு முன்னேற்றியிருக்கிறார் என்பது எங்களிருவரதும் தனிப்பட்ட பேச்சுகளில் பெருவாரியாக அடிபடும்.

அதற்கு நிதர்சனமான, யதார்த்தமான பதிலை நான் டக்ளஸிடம் கண்டதில்லை. அதனை எனது உரிமையில் நித்தியுடனான நட்பில் இறுக்கமாக சொல்லியிருக்கிறேன்.

டக்ளஸுக்கு அதிகாரப் பரவலில் நம்பிக்கை இருக்கிறது. இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் எங்களுக்கு வழி இருந்தது, இதை பிரபாகரன் சரியாக கையாளவில்லை என்ற இடித்துரைப்பு இருந்தது. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் 13 ஆம் சரத்துக்கும் மேலே போய் மஹிந்த 13 தருவார், நான் சொல்கிறேன் என்று அவருக்காக வாக்குகள் சேகரிக்க துணிவிருந்தது. ஆனாலும் இன்று வரைக்கும் நடைமுறையில் சிங்கள பேரினவாதத்தின் ஒரு நாடு, ஒரு தேசம், அதிகாரப் பரவலுக்கு இடமில்லை என்ற அந்த சிந்தனையில் சிறிதும் மாற்றமேற்படுத்த முடியவில்லை.

அது மட்டுமல்ல, போர்க் காலங்களில் நடந்த அட்டூழியங்களுக்கு ஒரு நியாயமான சர்வதேச விசாரணைக்கு ஒத்துப்போக உந்துவித்தல், எத்தனையோ ஆண்டுகளாக வழக்குகளே தொடுக்கப்படாமல் சிறையில் வாடும் கைதிகளை பிணையிலாவது விடுவித்தல், தமிழ் மக்களின் காணி அபகரிப்பு, வேலை வாய்ப்புகள் என்று தமிழ் மக்களின் மூல பிரச்சினைகளில் என்று எதிலும் எது விதமான முன்னேற்றமும் இல்லை.

அவற்றில் சிங்கள பேரினவாதத்திற்கு எந்த அக்கறையும் இருந்ததில்லை. அவர்களுடன் டக்ளஸ் இயங்கினாலென்ன, இயங்காவிட்டாலென்ன, சர்வதேச அரங்குகளுக்கு தமிழர்கள் தங்களோடு இணைந்து நடக்கிறார்கள் என்ற பரப்புரைகளுக்கு இவரையும் படம் காட்டித் தூதுக்குழுக்களில் சேர்த்து கொண்டு சென்றனர்.

ஜே.ஆரும் தன் ஆட்சிக் காலத்தில் 'தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக தமிழர்கள் எப்படிச் சொல்ல முடியும்? வெள்ளவத்தை உட்பட கொழும்பில் எல்லா இடங்களிலுமுள்ள கோவில்களை, பிரதம நீதியரசர் சர்வானந்தா, அரசின் சட்டமாஅதிபர் சிவா பசுபதியை இவர்களெல்லாம் தமிழர்கள்' – என்று சொல்வது வழக்கம்.

இந்தப் படங்களுக்கும் யதார்த்தத்துக்கும் எவ்வளவு வேறுபாடு என்பது கள நிலைவரத்தை நன்கு அறிந்த டக்ளஸுக்குத் தெரியும்.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருந்த காலப்பகுதியில், அவர் கோட்டாவுக்கு ஆதரவுதருவதற்கு எடுத்த நிலைப்பாடு பற்றி பேசினேன்.

வட – கிழக்கு மாகாண சபைகள் தடையின்றி இயங்க வழி செய்யப்படும், தமிழ்ப் பகுதிகளில் அபிவிருத்தி, வேலை வாய்ப்புக்கான திட்டங்கள் அமுல், தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வில் எதிர்கொள்ளும் நெருக்கடி நிலைகளுக்கு மிக விரைந்த தீர்வுகள் – என்ற அடிப்படையிலேயே அவருக்கு ஆதரவுதருவதற்கு ஒத்துக் கொண்டேன் என்றார்.

கோட்டாவை எப்படி மக்கள் அவரது பின்னணியில் ஏற்றுக் கொள்வார்கள்..? – எனக் கேட்டேன்.

கஷ்டங்கள் உண்டு. ஆயினும் , மக்கள் இப்போது தேசிய அரசியல் பேசுவோரின் வேதனைகளைப் புரிந்து கொள்கிறார்கள், எங்களது பணிகளை விளங்கிக் கொள்கிறார்கள், மாகாண சபைத் தேர்தலில் தாங்கள் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் கணிசமாக ஒரு லட்சத்துக்கும் மேலாக ஈ.பி.டி.பி. அவருக்கு பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கை உண்டு என்றார்.

வழமைபோல, நித்தியின் எதிர்பார்ப்பு, தமிழ்த் தேசியம் என்பவற்றுக்கு எமது பேச்சு திரும்பியது.

தமிழ்த் தேசியத்தை இன்று பேசித் திரிகிறவர்களே, உண்மையான தேசப் பற்று எதுவும் இல்லாமல், வாக்குகளுக்காக அதனை சொல்லித் திரிகிறார்கள்.– என்றார் டக்ளஸ்.

ஆனால், உண்மையில் தமிழ்த் தேசியத்தை பாதுகாக்க போராடுபவர்கள் தாங்கள்தான் என்றும் பிடிவாதமாக இருந்தார்.

ஒரு தேசத்திற்கு அடிப்படையானவர்கள் மக்கள். தமது சொந்த மண்ணை விட்டு அந்த மக்கள் புலம் பெயர்ந்து விடாமல் வாழ வேண்டுமானால் அவர்களுக்கு பொருளாதார வாழ்வை ஏற்படுத்த வேண்டும். மண்ணில் மக்கள் வாழ்ந்தால் மட்டுமே அவர்களது நிலங்களை, மொழியை, மதத்தை, கலாச்சாரத்தை பாதுகாத்து அவர்களை ஒரு தேசமாக்க முடியும். அதற்குத்தான் நாங்கள் போராடுகிறோம். அதுதான் நான் எடுத்து கொண்ட அரசியல். என் மாதிரியாக இல்லாமல் என்னைப் போல் ஆர்வமாக உழைத்தவர்கள் பலர் வெளியேறி விட்டார்கள். வெளிநாட்டில் இருந்து பேசுகிறார்கள். நான் எனது அனுபவங்களினூடாக உயிரைப்பிடித்துக்கொண்டு தான் இவ்வளவையாவது செய்கிறேன் – என்று தன் யதார்த்தத்தை விளக்கினார்.

ஏனைய கட்சிகள் கூட்டமைப்பு உட்பட, எவ்வளவுதான் கோட்டா – மஹிந்த அரசுக்கு தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்ற உதவுவோம் என்று பேசினாலும், அதை அவர்கள் ஏற்கமாட்டார்கள். ஏனெனில் அந்தத் தமிழ் தேசிய சக்திகள், வெளிநாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஆடுகிறார்கள் என்று புரிந்து வைத்திருக்கிறார்கள். கூட்டமைப்பினர் வசதிக்கு வந்தபடி வாக்குகளுக்கே பேசுகிறார்கள்.

உரிமைக்கான அரசியலையும் , அபிவிருத்திக்கான அரசியலையும் சமமாக முன்னெடுப்பதானால் அது தாமே என்றும், தாம்தான் மாற்றுப் பாதை என்றும் வாதிட்டார்.

நித்தி, தொழிற்சங்கத்திலிருந்து விலகி தமிழ் எழுதுவினைஞர் சங்கம் உருவாக்கியதன் பின்னணியையும், எம் போல பலர் 70 – 80 களில் புலம்பெயர்ந்தவர்கள் வாழ்வாதாரத்திற்காக புலம் பெயரவில்லை. அரசியலின் வன்முறை, பேரினவாத நிர்ப்பந்தங்களினால் வெளியேறினோம் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

நித்தி, தனது கால் உபாதைகளுடனும், நடந்து நடந்து மணலாறு, நெடுங்கேணி, ஒதியமலை, வவுனியா, செட்டிகுளம் பகுதிகளில் குடியேற்றிய மக்களின் காணிகள், வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்டு அவை பேரினவாதிகளின் கைகளுக்கு சென்றிருப்பதை புரிந்து கொள்ளச் சொன்னேன்.

வாக்கு பிரச்சாரத்தில் ஈடுபட்ட வேளை டக்ளஸ் உச்சத் தொனியில் , கூட்டமைப்பினர் எது சொன்னாலும் அந்தந்த காலங்களில் அதை நம்பி, ஏமாந்து, மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள் என்ற துணிச்சல் தான் அவர்கள் மற்றவர்களை உதாசீனப்படுத்த வைக்கிறது, இப்பொழுது நிலைமை அப்படியல்ல, நாங்கள் வாழ்வாதார திட்டங்கள் பலவற்றை நன்றாகச் செய்திருக்கிறோம், மாகாணசபையை நாங்கள் நிர்வகித்திருந்தால் அதனூடாக எவ்வளவோ செய்திருப்போம் என்று மக்கள் நினைக்கிறார்கள், தமிழர் வாக்கு வங்கியின் நிலை மாறிவிட்டது என்றார்.

ராஜபக்ஷ அரசு, தமிழரசுக் கட்சியினூடாக எதனையும் தமிழ் மக்களுக்குச் செய்யமாட்டார்கள். அவர்களின் அன்பையும் அதன் மூலம் மரியாதையையும் பெற்ற ஒருவன் நான் மட்டுமே.

தமிழர் தாயகத்தை பொறுத்தவரை நாங்கள் கேட்பவற்றை மட்டுமே அவர்கள் மறுக்காமலும் மறுக்க முடியாமலும் செய்வார்கள். தமக்கு நம்பிக்கையான என் ஊடாக மட்டுமே தமிழர்களுக்கு எதனையும் செய்ய விரும்புவார்கள் – என்றார்.

ஆனாலும் கோட்டாவிற்கு வடக்கிலிருந்து 25,000 வாக்குகளுக்கு குறைவாகவே கிடைத்தது. அது டக்ளஸுக்கு பெரிய ஏமாற்றம். முன்னேற்றமாக ஈ.பி.டி.பியின் வாக்கு வங்கி அதிகரித்து, அவர்கள் ஒன்றிலிருந்து இரண்டு நாடாளுமன்ற ஆசனங்களுக்கு முன்னேறினார்கள். ஆனால் கூட்டமைப்பிலிருந்து விலகிய மக்கள் தீவிர தேசியத்தை ஆதரித்தனர். எனினும் எந்த நிலையிலும் எதிர்பார்க்கப்பட்ட மந்திரிப் பதவி டக்ளஸுக்கு அளிக்கப்பட்டது.

ஆனாலும் அவர் அனுபவித்த அதிகாரங்களுக்கு கட்டுமானம் வைப்பதுபோல் அவர்களது பேச்சுக்கெல்லாம் ஆடக்கூடிய அங்கஜனை பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

பதவியேற்ற பின்னர் அரசின் போக்கு அரசியல் அறிவுள்ள டக்ளஸுக்குப் புரியும். 1958 போன்று அரசாங்கம் பௌத்த பீடங்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. மாகாண சபைத் தேர்தல் பற்றி பேசியவுடனே, கூச்சல்கள், அவை தேவைதானா என்ற வாதங்கள், இந்திய ஒப்பந்தத்தையோ, 13 ஆம் சரத்தின் அதிகாரங்கள் பற்றியோ கேட்டால் அவை நீக்கப்படவேண்டும் என்ற கூச்சல், அதிகாரப் பரவல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கோஷம்.

புத்த குருமாரினால் ஒரே நாடு, ஒரே தேசம் என்ற அட்டகாசம் – அதை மறுக்கும் தொனி கோட்டா, மஹிந்த விடம் இல்லை. டக்ளஸை எதிர்பார்த்து ஆதரவு கொடுத்த அத்திவாரம் எல்லாமே ஆட்டம் கண்டு மூச்சு விட முடியாமல் திணறுகிறது. நிலைமையை புரிந்து டக்ளஸ் அரசிலிருந்து தூரநின்று, தமிழ் தேசிய சக்திகளினுடன் இணைந்தோ, இணையாமலோ தனது ஆளுமையாலும் அனுபவங்களினாலும் வழிநடத்துவாரா..?

துர்ப்பாக்கியவசமாக எங்கள் அரசியல் தலைமைகளிடம் தமிழர் விடிவுக்கான மூலோபாயமான திட்டங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தந்திரமாக தங்களை தப்பவைப்பதற்கான வழிகளையே தேடி, ஒரு வட்டத்தை கூட்டி சாணக்கியம் செய்கிறார்கள்.

தேசியச்சக்திகள் அவரை அணைக்காதுவிட்டால், தமிழருக்கான இந்திய நிலைப்பாடுகளுக்கு என்றுமே ஆதரவு தந்த டக்ளஸ், அந்த யதார்த்த அடிப்படையில் இந்தியாவோடு சேர்ந்து நின்று தமிழர் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கோரி முன்னெடுத்துச்செல்வாரா..?

டக்ளஸுடன் பலகாலம் பழகிய, பழகுகின்ற பலரிடம் அந்த வினாவை வைத்தேன்.

டக்ளஸ் விரும்பினாலும் அவரால் அரசாங்கத்தை விட முடியாது. அவர்களும் விடமாட்டார்கள் என்பதே அபிப்பிராயமாக இருந்தது.

புலியின் வாலை பிடித்தவர் நிலைதான் அவரது நிலை என்று சுட்டிக்காட்டினார்கள். புலிக்காக முதலையின் வாலை பிடிக்கப்போய் திரிசங்கு நிலையில் அவர் இருக்கிறார் என்றார்கள், சரத்பொன்சேக்கா போன்று சிலுவையிலும் அறையப்படலாம் என்றார்கள்.

அவர் நித்தியின் இலட்சியத்தை எண்ணி, இனி ஆறாத கண்ணீர் வடித்தாலும் அந்தக் கண்ணீர் அவராகவே விதித்துக் கொண்டு பவனிவந்த வழிகளிலே ஒன்றையேனும் மாற்றிவிடாது போல் தெரிகிறது.

அயன், தன்னுடைய தலையிலே உலக்கையினால் எழுதி விட்டான். அவன் அன்று எழுதிய எழுத்தை அழித்து மீள எழுத முடியாது, அவன் ஓங்கி அடித்து விட்டான் என்று எழுதினான் உமர் கய்யாம்.

"தப்புத் தாளங்கள், அது வழிதவறிய பாதங்கள், இது அப்படியே ஆகுமென்று அவன் எழுதிய வேதங்கள்" என்று கண்ணதாசன் சொன்னார். அருணகிரியாரோ, முருகப் பெருமானுடைய திருவடியிலே எனது தலையை கொண்டு போய் வைக்க, அவன் கால் பட்டு அயன் எழுதிய தலையெழுத்து அழிந்தது என்று பின்வரும் பாடலில் உறுதிபடக் கூறுகிறார்.

**வேல்பட்டழிந்தது வேலையும் சூரும்**
**வெற்பும் அவன்**
**கால்பட்டழிந்த திங்கென் தலைமேல் அயன்**
**கையெழுத்தே.**

ஆக, நித்தியைத் தன் தந்தையாக வரித்துக் கொண்டு அவரின் இலட்சியங்களுக்கு பாடுபடுகிறேன் என்று சொன்ன டக்ளஸ், ஒரு கேள்வியை தன் நெஞ்சுக்கு உண்மையாக கேட்கவேண்டும். தான் தனது தந்தையாக வரித்த நித்தி தன் உடல் உபாதைகளோடும், ஒவ்வொரு ஊருக்கும் சென்று குடியேற்றிய காணிகளை இன்று ஆக்கிரமித்து, இருப்பவர்கள் யார்?

1987 இல் வட – கிழக்கு உட்பட்ட தமிழ் பிரதேசத்தில் இன்று (24 வருடங்கள் அவர் மந்திரியாக இருந்தபோதும்) ஏற்பட்ட குடியேற்றங்களால் பறிபோன பிரதேசங்கள் எவ்வளவு?

ஏதாவது செய்து இதனைத் தடுக்க முடிந்ததா? அன்றில் தனது தந்தையார் தமிழ் மக்களுக்கு கொடுத்த காணிகளையாவது மீளப் பெற்று அவர்களுக்கு கையளிக்க முடிந்ததா?

உரிமைப் போராட்டத்தை மழுப்பி, வாழ்வாதாரத்தால் மக்களை அந்த மண்ணில் நிலைநிறுத்தி, அதனால் தேசத்தை கட்டியெழுப்புவோம் என்ற உபதேசத்திற்கு முதலில் மண் இருக்க வேண்டும். அந்த சித்தாந்தம் கடல் வற்றும் என்று பூனை உடல் வற்றி செத்த கதையாகத்தான் முடியும்.

தானாக தன்மேல் எழுதிய ஊழ்வினையை அழிக்க, டக்ளஸ் அருணகிரியார் சொன்ன மாதிரி நித்தியின் பாதங்களில் தன் தலையை வைத்து, அவர் இலட்சியத்தில் ஒரு புதிய பாதையை சமைக்க வேண்டும் என்பது எனது அன்புக் கோரிக்கை.

'மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தையென்னோற்றான் கொல்லெனும் சொல்' என்ற குறள் நினைவுக்கு வருகிறது.

ஒரு கட்டாய கல்யாணத்தில் ஒரு வாழ்வுக்காக நாங்கள் இசைந்து, இணங்கிபோகவேண்டும் என்பதுதான் தமிழருக்கு அயன் எழுதிய விதி என்று டக்ளஸும் அவரது சகாக்களும் நினைத்தால், இன்னொரு நாள் விடியப் போகும் பொழுதில்தான் தமிழ்மக்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

அந்த சரித்திரம் கதிரவேலு நித்தியானந்தா தேவானந்தாவான டக்ளஸ், தனக்குத் தகுந்தமாதிரி தொப்பி அணிந்து அரசியல் செய்த சந்தர்ப்பவாதியா, அன்றில் விடுதலை என்று கிளம்பிய ஒரு அரசியல் தந்திரியா என்றுதான் எழுதுமா?

( முற்றும் )

# தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி இராகலை தோட்டத்தொழிலாளர் போராட்டம்!





தேயிலைத் தோட்டங்கள் காடாகி விலங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளமையால், தேயிலைத் தோட்டங்களை துப்புரவு செய்து தமக்கான தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி இராகலை- மாக்குடுகலை மற்றும் கிளன்டவன் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்று வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாக்குடுகலை தோட்டத்தில் கடந்த 20 வருடங்களாக மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலை வளாகத்திலேயே இரு தோட்டங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இன்றுடன் 13 ஆவது நாளாக பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்வதாகவும், தீர்வு கிடைக்கும் வரை ஓயப்போவதில்லை எனவும் போராட்டத்தில் பங்கேற்ற தொழிலாளர்கள் கூளுரைத்துள்ளனர்.

இது தொடர்பில் தொழிலாளர்கள் கூறியவை வருமாறு –

'மேற்படி தோட்டங்களை பொறுப்பேற்றுள்ள நிர்வாகம் உரிய வகையில் செயற்படாதமையால் தோட்டங்கள் காடாகி வருகின்றன. சிறுத்தை உட்பட விலங்குகள் பெருகியுள்ளன. இதனால் பெருந்தோட்டத்துறை அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதேபோல தொழிலுக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. உயிரை கையில் பிடித்துக்கொண்டே வேலைசெய்ய வேண்டிய அவலம் தொடர்கிறது.

எனவே, காடாகவுள்ள தோட்டங்களை துப்புரவுசெய்து, தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, வாழ்வாதாரத்தை மேம்படுத்துமாறு கோரியே போராட்டம் இடம்பெறுகின்றது. எமக்குத் தீர்வு அவசியம். அது கிடைக்கும்வரை போராடுவோம். – என்றனர்

# சட்டமா அதிபர் திணைக்கள இல்லம் மன்னாரில் நேற்று திறந்து வைப்பு!





மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, பெரியகமம் பகுதியில் அமைக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் மன்னார் பிராந்திய உத்தியோகபூர்வ இல்லம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிர்வாக பிரிவின் தலைவர் மேலதிக மன்றாடியார் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவத்தனவின் அழைப்பில் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல த லிவேரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட உத்தியோக பூர்வ இல்லத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகஸ்தர்கள், நீதிபதிகள், மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்ஸி டி மேல், பொலிஸ், இராணுவ அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா அவர்களால் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல த லிவேராவுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட பிராந்திய உத்தியோகபூர்வ இல்லம் அமைக்க கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பத்தாயிரம் பேருடன் இந்தியா போவதென்பது அமைச்சர் டக்ளஸின் ஏமாற்று மாயாஜாலம்!

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்

பத்தாயிரம் பேருடன் இந்தியா செல்லப்போகின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை ஏமாற்று வேலையென தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, கடற்றொழில் அமைச்சர் பத்தாயிரம் பேருடன் இந்தியா செல்வதாகக் கூறியுள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில் –

'டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தவரையில் அவர் அமைச்சர். தனது அமைச்சுப் பதவியை தமிழ் மக்கள் மத்தியில் தக்கவைப்பதற்கான ஒரு பம் மாத்தாகவே நாம் இந்த விடயத்தைப் பார்க்கின்றோம்.

ஓர் அதிகாரமுள்ள அமைச்சருக்குத் தெரியும் கடற்கரையில் இருந்து பத்து கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் இந்திய ரோலர் வந்து தொழில் செய்கின்றது. இதை கரையில் இருந்து நாங்கள் பார்க்கின்றோம்.

அனைத்து கடற்கரையிலும் அதாவது, கொக்குத்தொடுவாயில் இருந்து தீவகம் வரை 50 மீற்றருக்கு ஒரு கடற்படையின் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடற்படைக்கு இந்திய ரோலர் வருவது தெரியும். எனவே, அதனைப் பிடிக்க முடியாது என்றால் ஏன் அமைச்சர் என்று சொல்லுகின்றார். அந்தஸ்துள்ள அமைச்சர் பத்தாயிரம் பேருடன் இந்தியா செல்வதென்று யாரை ஏமாற்றுகின்றார்? இது மக்களை ஏமாற்றும் விடயம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தீவிரமாம்!

## கொழும்பு ஊடகம் தகவல்

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்பதில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தீவிர முனைப்புக் காட்டி வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது, ஜெனிவா விடயத்தில் இலங்கைக்கு பெரும் சவாலாக உள்ளதென அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அடுத்தவாரம் இலங்கைக்கு ஒரு சவாலான காலம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களுக்காக நாட்டை கேள்விக்கு உட்படுத்தும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற மேற்கத்தேய நாடுகள் தீவிரம் காட்டி வருகின்றன எனவும் ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் வெளிவிவகார அமைச்சரின் உரைக்குப் பதிலுரையாக அமைந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரனின் அறிக்கை சவாலை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை தொடர்பாக வாக்கெடுப்பை நோக்கிச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும் வகையில் திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டுமென கூட்டு நாடுகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரித்தானிய அரசாங்கத்தின் தடைக்கு எதிராகவும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.


தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வித பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வாதிடுகின்றது என்பதை குறித்த ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இலங்கை தொடர்பான தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் திங்களன்று வாக்கெடுப்புக்கு வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பிரித்தானியா தலைமையிலான இணையனுசரணை நாடுகளின் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு 47 உறுப்பு நாடுகள் வாக்களிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைகளைக் கொண்டாட விரும்பினால் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்குக!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உத்தரவு



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் இன்னும் நாட்டில் இருப்பதால், வரவிருக்கும் பண்டிகைக் காலங்களில் விழிப்புடன் இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதாவது, பண்டிகையை கொண்டாட விரும்பினால் சுகாதார வழிகாட்டுதல்களை கடைபிடிக்க வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

கொரோனா வைரஸ் தொற்றுநோயால் கடந்த ஆண்டு ஏப்ரல் புத்தாண்டைக் கொண்டாட பொதுமக்களால் முடியவில்லை.

இருப்பினும் இந்த ஆண்டு தொற்றுநோயின் பரவல் தொடர்ந்தாலும் பொதுமக்களுக்கு பண்டிகையைக் கொண்டாட வாய்ப்பு வழங்கப்படும் என்றும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கே இலங்கையில் வைரஸ் பரவல் காணப்படுவதால் இது சாத்தியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் இன்னும் உள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும் பண்டிகைக் காலங்களில் எச்சரிக்கையாக இருக்குமாறும் பொருள் கொள்வனவில் ஈடுபடும்போதும் வெளியில் செல்லும்போதும் தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றவும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏப்ரல் புத்தாண்டு பண்டிகை காலங்களில் இயங்கும் கடை உரிமையாளர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் அஜித் றோஹண கேட்டுக்கொண்டுள்ளார்.

கடைகளுக்குள் நுழைவதற்கு முன்பு கைகளைக் கழுவுமாறும் அதேநேரம், வெப்பநிலையை கண்காணிப்பதுடன், சமூக தூரத்தை பராமரிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பண்டிகையை பாதுகாப்பான முறையில் கொண்டாட விரும்பினால் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

மக்கள் அவ்வாறு செய்யத் தவறினால், அவர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்படலாம் என்றும் அஜித் றோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை போன்றவற்றை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பரீட்சைகளை ஒத்திவைப்பது பேச்சு மட்டத்திலேயே உள்ளது. இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

இது தொடர்பில் நாம் கலந்துரையாட வேண்டியது மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமுமே. அதற்கு எமக்கு கால அவகாசம் வேண்டும்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன் 2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் – என்றார்.

# சொத்துக் குவிப்பு வழக்கு; அமைச்சர் ரோஹித விடுதலை

கொழும்பு, மார்ச் 19

சட்டவிரோத சொத்துக் குவிப்பு தொடர்பில் இலஞ்சமற்றும் ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த வழக்கில் இருந்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சராகச் செயற்படும்போது ரோஹித அபேகுணவர்தன 412 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமாகக் கையகப்படுத்தினார் என்று இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

குறித்த வழக்கு இன்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் ஆதித்யா பட பெதிகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவை விடு தலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மூவரினதும் எழுத்துமூல அனுமதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்த னவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே, இந்த வழக்கை தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாதென்று கூறி, வழக்கில் இருந்து அமைச்சர் ரோஹிதவை விடுதலை செய்ய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# முப்பது இலங்கையர்கள் மூன்று படகுகளில் லட்சதீவு அருகே ஆயுதங்களுடன் சிக்கினர்!

## 300 கிலோ ஹெரோயினுடன் கைது காலியிலிருந்து புறப்பட்டவர்களாம்!

(ந.லோகதயாளன்)

இலங்கையின் காலி பகுதியில் இருந்து புறப்பட்ட படகுகள் மூன்று லட்சதீவு அருகே இந்திய கரையோரப் பாதுகாப்பு படையினரால் ஆயுதங்களுடன் சிக்கியுள்ளன என்று இந்தியத் தரப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

3 படகுகளிலும் 30 இலங்கையர்கள் உள்ளனர் எனவும், 300 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள்களும் படகுகளில் காணப்படுகின்றன எனவும் இந்தியக் கரையோரக் காவல் படையினர் அறிவித்துள்ளனர்.

30 பேரிடம் இருந்தும் 5 ஏ.கே. ரகத் துப்பாக்கிகளும் மேலும் சில கைத்துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன. ஏ.கே. ரகத் துப்பாக்கிகளுக்கான ஆயிரம் தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆயுதங்கள், போதைப் பொருள்கள் சகிதம் படகுகளுடன் கைது செய்யப்பட்டவர்கள் இதுவரை இந்தியாவின் கரைக்குக் கொண்டுவரப்படாமையால் மேலதிக தகவல்களைப் பெற முடியவில்லை.

இந்தியக் கரையோரக் காவல்படையின் வான், கடல் கண்காணிப்பு அணிகள் ஒன்றிணைந்து முன்னெடுத்த இந்த நடவடிக்கையின் போது லட்சதீவுகளில் ஒன்றான மினிகோ தீவுக்கு அருகே இந்தப் படகுகள் மடக்கப்பட்டன.

லட்சத்தீவுகள் (Lakshadweep) இந்தியாவிலுள்ள யூனியன் பிரதேசங்களில் ஒன்று. இதன் தலைநகரம் கவரத்தி ஆகும். இது மொத்தம் 30 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட 36 தீவுகளாக அமைந்துள்ளது. கேரளக் கரைக்கு அப்பால் 200 முதல் 300 கிலோ மீற்றர் தூரத்தில், அரபிக் கடலில் இது உள்ளது. லட்சத்தீவுகள் கேரள உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

# கொழும்பில் ஏட்டிக்குப் போட்டியாக ஆசிரியர் சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

## கல்வி அமைச்சுக்கு முன்னால் அமைதியின்மை



பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆசிரியர் சங்கங்களால் முன் னெடுக்கப்படும் இருவேறு ஆர்ப்பாட்டங்களால் அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

அரசுக்கு எதிரான வகையில் சங்கமொன்றும், அரசுக்கு ஆதரவான வகையில் மற்றுமொரு சங்கமும் ஒரே இடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் நிலையிலேயே அமைதியின்மை ஏற்பட்டது.

அதிபர் மற்றும் கல்வி நிர்வாக சேவையில் காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யுமாறும், அரசியல் நியமனங்களை உடனடியாக நிறுத்துமாறும் வலியுறுத்தி ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான ஆசிரியர் சங்கங்களின் கூட்டணி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதேநேரத்தில், ஒன்றிணைந்து எமது பலத்தைக் காட்டுவோம் என்று அரசுக்கு ஆதரவான பொதுஜன கல்வி சேவைகள் சங்கத்தால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது.

இரண்டு ஆர்ப்பாட்டங்களும் கல்வி அமைச்சுக்கு முன்னால் வீதியில் நடத்தப்படும் நிலையில் இரண்டு தரப்பினரும் மோதிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன்போது பொலிஸாரால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இரண்டு தரப்பினரும் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதால் அந்தப் பகுதியூடான வாகனப் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் யுத்தத்துக்குப் பின் பல அபிவிருத்தித் திட்டங்கள்

## அமைச்சர் கெஹலிய

(எஸ்.நிதர்ஷன்)

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம்.

– இவ்வாறு அஞ்சல் சேவைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

யாழ்.வட்டுக்கோட்டையில் இன்று புதிய தபாலக கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை–

தபால் சேவை என்பது மக்களின் அவசியமான சேவையாகக் காணப்படுகின்றது.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கவலைப்பட்டாலும் 2010 இற்குப் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2009 இற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுக்கு காரணமான அரசியல் காரணங்கள் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம்.

சுபீட்சத்தின் நோக்கு என்ற எமது அரசின் திட்டத்தின் கீழ் வடபகுதியிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கிராம மட்டங்களிலும், பிரதேச மட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காலத்திலும் கூட தபால் சேவையானது மிகவும் சிறப்பாகச் செயற்பட்டது. இந்த வைரஸ் தொற்று காலத்திலும் கூட எமது தபால் சேவை ஊழியர்கள் தமது கடமையைச் சிறப்பாக மேற்கொண்டிருந்தனர். அதற்காக எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தை பொறுத்தவரை விவசாயம், கல்வி, உயர் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளே மிக முக்கிய துறைகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இந்தத் துறைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

மேற்குறிப்பிட்ட இந்தத் துறைகளை ஒன்றிணைத்து முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பெரும் உதவியாக இருப்பது இந்தத் தபால்துறை என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். ஒரு இணைப்புக் கருவியாகவே நான் தபால் துறையைக் காண்கின்றேன்.

எமது அரசானது வடபகுதி அபிவிருத்தி தொடர்பில் மிகவும் ஆர்வமாகச் செயல்படுகின்றது.

தபால் துறையை நவீனப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 224 வருடங்கள் பழைமைவாய்ந்த தபால்துறையை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எவ்வாறு முன்னேற்றுவது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

உலக நாடுகளிலுள்ள தபால் துறையைப் போன்று நமது நாட்டிலும் அதி நவீன வசதிகளைக் கொண்ட வகையில் எமது நாட்டின் தபால் துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் – என்றார்.

# மாகாண சபைத் தேர்தலுக்குத் தயாராகுங்கள்!

## ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குப் பணிப்பு

மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அரச உயர்மட்டத் தலைவர்களால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதன்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் 9 மாகாண சபைகளுக்கும் தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.

இந்நிலையில், ஆளுங்கட்சியின் மாவட்ட தலைவர்களுக்கும், அரச உயர் மட்ட பிரமுகர்களுக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதன் போதே தேர்தலுக்கு தயாராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது. குறித்த சந்திப்புக்கு முன்னர் ஆளுங்கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களையும் உயர்மட்ட தலைவர்கள் சந்தித்து, கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்பனவும் தேர்தலைச் சந்திப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகளை ஆரம்பித்துள்ளன. வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரன் - தவராசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், கே.வி.தவராசா ஆகியோர் முன்வைத்த சமர்ப்பணங்களின் அடிப்படையிலேயே இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

'உதயன்' பத்திரிகையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப் படத்துடன் அவரது பிறந்த நாளன்று செய்தி வெளியாகியிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் முறைப்பாட்டுக்கு அமைவாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மற்றும் செய்தி ஆசிரியர் கு. டிலீப் அமுதன் ஆகியோர் சந்தேகநபர்களாகப் பொலிஸாரால் பெயரிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, சட்டத்தரணிகளான ஆனோல்ட் பிரியந்தன், சலோசியஸ், கணாதீபன் ஆகியோரும், 'உதயன்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான வி.திருக்குமரன், ரிசிகேசன் ஆகியோரும் முன்னிலையாகினர்.

### வழக்கு

மாவீரர் நாளுக்கு எதிரான கட்டளையை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கியிருந்தது. டிசம்பர் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. 'பி' அறிக்கையில் ஏற்கனவே கட்டளை வழங்கப்பட்டிருந்தது என்றும், அந்தக் கட்டளையை மீறியதுடன் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உருவப்படத்தையும் செய்தியையும் வெளியிட்டனர் என்றும், அந்தச் செய்தி இனங்களுக்கு இடையே முரண்பாட்டை ஏற்படுத்துவதாக இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அறிக்கையைத் தாக்கல் செய்தபோது அதில் முறைப்பாட்டாளராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவும், சிறுகுற்றப் பிரிவைச் சேர்ந்த பொறுப்பதிகாரி விசாரணையாளராகவும் குறிப்பிடப்பட்டு, நீதிமன்றில் விவரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக அறிக்கையில் 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கு.டிலீப் அமுதன் ஆகிய இருவரிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாகவும், அவர்களை முதலாவது, இரண்டாவது சந்தேக நபர்களாகப் பெயர் குறிப்பிட்டும் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஜனவரி 19 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த விசாரணை, மார்ச் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், நேற்று இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபர்கள் இருவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டு விட்டன எனவும், எனவே வழக்குக் கோவையை சட்டமா அதிபரிடம் ஆலோசனைக்காக அனுப்பி வைத்து, அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள கால அவகாசத்தை பொலிஸார் மன்றில் கோரினர்.

### ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா வாதம்

இதன்போது மன்றில் தனது தரப்பு வாதங்களை ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா முன்வைத்தார்.

"எனது சேவை பெறுநரை சந்தேகநபர் என்று குறிப்பிட்டிருப்பதை முற்றாக மறுதலிக்கின்றேன். இந்த வழக்குத் தொடர்பில் பூர்வாங்க ஆட்சேபனைகளை முன்வைக்கின்றேன்." – என்று நீண்ட சட்டவாதத்தை அவர் முன்வைத்தார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் படம் மற்றும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தில் எந்தவிதமான இனமுரண்பாடும் இல்லை. இந்த விடயம் 'உதயன்' பத்திரிகையில் மட்டும் வெளியாகவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற 'வலம்புரி' பத்திரிகை, 'காலைக்கதிர்' பத்திரிகை என்பனவும் அதே தினத்தில் படங்களுடன் செய்திகள் பிரசுரித்திருக்கின்றன. தெற்கில் இருந்து வெளிவரும் 'லங்காதீப' பத்திரிகை, 'டெய்லி மிரர்' என்பவற்றிலும் வே.பிரபாகரனின் படம் வெளியாகியிருந்தது.

ஆனால், ஒருவருக்கு எதிராக மட்டுமே தனிப்பட்ட குரோதம் காரணமாக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த ஆறு பத்திரிகைகளும் தங்களுடைய தார்மீகக் கடமையைத்தான் செய்திருக்கின்றன. அரசினுடைய முடிவு என்ன என்பதை – அரசுடைய நிலைப்பாட்டை மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டியது பத்திரிகைகளுடைய கடமை. அவ்வாறு செயற்பட்ட பத்திரிகைக் எதிராக வழக்குத் தாக்கல் செய்திருப்பது தனிப்பட்ட குரோதமே காரணம்.

இந்தத் தனிப்பட்ட குரோதத்துக்கு 'உதயன்' பத்திரிகையில் வெளிவந்த அறிக்கை ஒன்றே காரணம். பெண் ஒருவரின் முறைப்பாட்டை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாரம் எடுக்காமையால் அந்தப் பெண் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்தார் என்று அதில் குறிப்பிட்டிருந்தது. அந்தச் செய்தியால் தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று டிசம்பர் மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு பொலிஸ் பொறுப்பதிகாரியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 4ஆம் திகதி உதயனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. இவற்றை நீதிமன்று கவனத்தில் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.ரி.தவராஜா தனது வாதத்தை முன்வைத்தார்.

### ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதம்

இதனையடுத்து ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தன் வாதங்களை முன் வைத்தார்.

தனது கட்சிக்காரரான டிலீப் அமுதனுக்கு எதிராகக் குற்றம் ஏதும் சுமத்த முடியாது என்பதற்கான தனது வாதத்தை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்தார்.

### உத்தரவு

இந்த வாதங்களின் அடிப்படையில் பொலிஸாரிடம் நீதிவான் சில விடயங்களை வினவினார். இறுதியில் இந்த வழக்குத் தொடர்பில் மேலதிக விசாரணை செய்வதானால் செய்யலாம். ஆனால், 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மற்றும் 'உதயன்' செய்தி ஆசிரியர் கு.டிலீப் அமுதன் ஆகியோர் சந்தேக நபர்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்டதிலிருந்து விடுவிக்கப்படுகின்றார்கள். வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டால் இருவரும் முன்னிலையாகவேண்டும். வழக்கு ஜூலை மாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுகின்றது என நீதிவான் ஏ.பீற்றர்போல் உத்தரவிட்டார்.

# புத்தாண்டை முன்னிட்டு புதிய சுகாதார வழிகாட்டல்

எதிர்வரும் தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு புதிய சுகாதார வழிகாட்டல்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் தாக்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்டால் சுகாதார வழிகாட்டல்களில் மீண்டும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போது நாட்டில் சுகாதார வழிகாட்டுதல்கள் தளர்த்தப்பட்டுள்ள போதிலும், மக்கள் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை எனின் சட்டங்கள் மீண்டும் கடுமையாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப்பகுதிகளில் சுகாதார வழிகாட்டிகளை உரிய வகையில் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவான வர்த்தமானி அறிவிப்பு விதிமுறைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையிலான காலப்பகுதியில் சுகாதார வழிகாட்டல்களை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 363 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தடை விதிப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆராய்ந்து வருவதாக பிரித்தானிய அமைச்சர் நைஜல் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது நைஜல் அடம்ஸ் மேலும் கூறியுள்ளதாவது:-

பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியன நிகழ்ச்சி நிரலில் மிகவும் முக்கிய வாய்ந்த விடயங்களாக காணப்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு பொறுப்பு கூறல் மிகவும் அவசியமானதொன்றாகும்.

இதேவேளை உலக நாடுகளில் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சில தடைகளை விதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்நிலையில் மேலும் பலருக்கு தடைகளை விதிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

இதேவேளை இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளுக்காக பிரிட்டனில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவரின் முன்மொழிவுகளையும் நாங்கள் ஆதரிக்கிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொறுப்புக் கூறலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையின் மனித உரிமை விடயங்களின் முன்னேற்றங்களைப் புறக்கணிப்பதாக அமைந்துள்ளது.

பிரேரணையை முன்வைத்துள்ள நாடுகள் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் இந்த அரசின் வெற்றியைத் தொடர்ந்து இலங்கையில் அதிக ஆர்வம் காட்டுகின்றன.

பொதுநலவாய உறுப்பு நாடான இலங்கைக்கு எதிராகப் பிரிட்டனின் நடவடிக்கைகளுக்கு எமது அதிருப்தியை வெளியிடுகின்றோம்.

இலங்கை மீது ஒரு பிரேரணையைக் கொண்டுவருவதில் உறுதியாக இருக்கும் பிரிட்டன் தலைமையிலான நாடுகள், அது சரியானதா அல்லது தவறானதா என்பது குறித்து கவலைப்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் தெற்கு நாடுகளுக்கு எதிராக வடக்கு நாடுகள் குழிபறிக்கும் செயலில் ஈடுபடுகின்றன.

ஜெனிவாவில் இலங்கை மீது இந்தியா எவ்வித அநியாயத்தையும் இழைக்காது.

உள்நாட்டில் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இலங்கை உறுதியாக இருக்கின்றது.

காணாமல் போனவர்கள் மற்றும் இழப்பீட்டு அலுவலகங்களுக்கான கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் வழங்கவுள்ளோம் – என்றார்.

## ஐ.நா. மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கைக்கு 2014 ஆம் ஆண்டிலும் இதேபோன்றதொரு நிலைதான் ஏற்பட்டிருந்தது. அப்போது மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த பேராசிரியர் நவநீதம்பிள்ளை அம்மையாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதனை ஏற்று அவர் நாட்டுக்கு வந்தார். அனைத்து பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டார். குறைகளையும் பட்டியலிடுக்காட்டினார். ஆனாலும், அவர் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டார். இளைஞர் நாடாளுமன்றம் குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இலங்கை வருவதற்கு முன்னர் அந்நாடு தொடர்பில் இருந்த மனநிலை விஜயத்தின் பின்னர் மாறியதாக நவநீதம்பிள்ளை அம்மையார் குறிப்பிட்டிருந்தார். யாழ். பயணத்தின்போது மொழி உரிமைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை உணர்ந்தார்.

எனவே, இலங்கை வருமாறு தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அழைப்பு விடுக்கவேண்டும். அதனை பிற நாடுகள் சாதகமான விடயமாக பார்க்கக்கூடும். அறிக்கைகளை மட்டும் அடிப்படையாகக்கொண்டே இலங்கை தொடர்பில் அவர் விம்பமொன்றை உருவாக்கி வைத்திருப்பார். ஆகவே, இலங்கைக்கு நேரில் வந்து, பல தரப்புகளுடன் கலந்துரையாடி நிலைமையை கண்காணித்தால் அவரால் யதார்த்த நிலைமையை புரிந்துகொள்ள முடியும். தவறான விம்பமும் உடையக்கூடும்.

அறிக்கையாளர்கள் வருவதைக்காட்டிலும் மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் வந்தால்தான், இலங்கை என்ன செய்துள்ளது, எவ்வாறான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதனை நேரில் அவதானிக்க முடியும் – என்றார்.

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போதே நாம் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தோம். இலங்கையைப் போன்ற சிறிய நாட்டுக்கு மாகாணசபை முறைமை பொருத்தமானதாக இருக்காது. எனவே மாகாணசபை முறைமை மீண்டும் ஆரம்பிக்கப்படுமாயின் அது பாரிய அழிவாகும்.

எனினும் அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்களை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி மாகாணசபைக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அச்சுறுத்தல், அடக்குமுறைகளுக்கு மத்தியில் மட்டக்களப்பில் நீதிகோரிய போராட்டம் நேற்று



மட்டக்களப்பு,மார்.20

தமிழர்களுக்கு சர்வதேச நீதிகோரி பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் மத்தியில் மட்டக்களப்பில் மாபெரும் பேரணியும் போராட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிபேரணி இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த நீதிகோரிய எழுச்சிப்பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் சர்வதேச நீதிகோரி முன்னெடுக்கப்பட்டுவந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்தின் 17 ஆவது நாளான இன்று அதனை நிறைவுறுத்தும் வகையிலும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நீதிகோரிய வகையிலும் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த போராட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரினால் குறித்த போராட்டத்தில் ஈடுபடுவோர் என்ற ரீதியில் 25பேருக்கு எதிராக நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டிருந்தது.

குறிப்பாக காந்தி பூங்கா,மாமாங்கம் ஆகிய பகுதிகளிலில் போராட்டம் நடத்துதற்கு நீதிமன்ற தடையுத்தரவு பெறப்பட்டிருந்ததுடன் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணி இயக்கத்தின் வடகிழக்கு ஏற்பாட்டாளர்களான வேலன் சுவாமி, எஸ். சிவயோகநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கு நேற்று தடையுத்தரவுகள் வீடுகளுக்கு சென்று விநியோகிக்கப்பட்டமையுடன் மாமாங்கேஸ்வரர் ஆலய மதில்களிலும் தடையுத்தரவுகள் ஒட்டப்பட்டிருந்தன.

இன்று காலை மட்டக்களப்பு நகரில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தண்ணீர் பீச்சியடித்துத் தாக்குதல்மேற்கொள்ளும்வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தமையுடன் கலகமடக்கும் பொலிஸாரும் நிறுத்தப்பட்டு மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக அச்சநிலையேற்படுத்தப்பட்டிருந்தது.

பொலிஸாரின் அச்சுறுத்தல்கள் மற்றும் நீதிமன்ற தடையுத்தரவுகள் காரணமாக போராட்டம் நடைபெறும் இடம்மாற்றப்பட்டது. மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்திற்குள் தடையுத்தரவு காரணமாக அவை மாற்றப்பட்டு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டியில் முன்னெடுக்கப்பட்டது.

சித்தாண்டி, மாவடிவேம்பு மருங்கையடி பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் ஒன்றுகூடியவர்கள் அங்கிருந்து பேரணியாக சித்தாண்டி சந்திப்பிள்ளையார் ஆலயம் வரையில் பேரணியாக வந்தனர்.

தமிழர் தாயகத்தினை அங்கீகரிக்கவும், இந்திய இராணுவத்தினை தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேறுமாறு வலியுறுத்தியும், மட்டக்களப்பில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் இருந்து உயிர்நீர்த்த அன்னை பூபதி உண்ணாவிரதம் ஆரம்பித்த இன்றைய தினத்தில் தமிழர்களுக்கான நீதிகோரிய இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமிழர் தாயகப்பகுதியை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும், அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தவேண்டும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நீதிமன்றம் ஊடாக தீர்வினை வழங்க வேண்டும், ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட 46இன் கீழ் ஒன்று தீர்மானத்தினை நிராகரிப்போம், கடத்தப்பட்டுகாணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டும், மேய்ச்சல் தரை நிலத்தினை மீட்டுத்தாருங்கள், எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும் – என்பன உட்பட பல்வேறு கோஷங்கள் இந்த பேரணியின் போது எழுப்பப்பட்டன.

இந்த பேரணி ஆரம்பமான நிலையில் அங்குவந்த ஏறாவூர் பொலிஸார் தடையுத்தரவு உள்ளதாக கூறி போராட்டத்தினை நிறுத்துமாறு கோரிய நிலையிலும் அவற்றினை கருத்தில்கொள்ளாமல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போலியான தடையுத்தரவினை காட்டிப் பேரணியை தடுக்க முனைவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களையும் பொலிஸார் வீடியோ புகைப்படம் எடுத்தபோது அதற்கு எதிரான கோசங்களையும் பேரணியில் சென்றோர் எழுப்பினர். தடைகளைத் தாண்டி முன்னெடுக்கப்பட்ட பேரணியானது சித்தாண்டி சந்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு சென்றதும் அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அங்கு ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு அனுப்பிவைக்கும் மனுவொன்றும் வாசிக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப்பேரணி இயக்கத்தின் வடகிழக்கு ஏற்பாட்டாளர்களான வேலன் சுவாமி, எஸ்.சிவயோகநாதன்,யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன்,ஞா.சிறிநேசன் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் இறுதியில் மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் சமாதிக்கு சென்ற பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணி இயக்கத்தினர் அங்கு சமாதியில் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

## யாழ். வந்தார் சட்டமா அதிபர்!

சட்ட மா அதிபர் தப்புல்லடி லிவேரா யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு நேற்று வருகை தந்துள்ளார்.

வடக்கு மாகாண பயணத்தில் யாழ்ப்பாணம் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வருகைதந்த அவரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் வரவேற்றார்.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள சட்ட மா அதிபர் நேற்றுக் காலை மன்னாருக்கு வருகை தந்தார். அங்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதிக்கான உத்தியோகபூர்வ இல்லத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500













இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

# இரண்டாவது தாரத்தைக் கோடரியால் கொத்தி கொலைசெய்த முதலாவது தாரமும் மகளும்!





கணவனின் இரண்டாவது மனைவியை முதலாவது மனைவி தனது மகளுடன் இணைந்து கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்த சம்பவமொன்று திம்புள்ள – பத்தனை பகுதியில் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள – பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிறேக்கிலி தோட்டம் பொரஸ்கிரிஸ் பிரிவு பகுதியைச் சேர்ந்த 42 வயதான விஸ்வநாதம்மா என்ற பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

குடும்பத்தில் மனைவிமார்களுக்கு இடையில் மிக நீண்ட நாள்களாக பிரச்சினை நிலவி வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான நிலையில் தனது மகளுடன் இணைந்து, முதலாவது மனைவி, இரண்டாவது மனைவியை கோடரியால் கொத்திக் கொலை செய்துள்ளார்.

குறித்த பெண்ணை கொலை செய்த, முதலாவது மனைவி மற்றும் மகள், அங்கிருந்து காட்டுப் பகுதிக்குள் தப்பிச் சென்ற நிலையில், பிரதேசவாசிகளுடன் இணைந்து பொலிஸார், சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலம் கொட்டகலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், நீதவான் விசாரணைகளின் பின்னர், சடலம் டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்படும் என பொலிஸார் கூறுகின்றனர்.

தனது கணவனுடன் வாழ்ந்த வந்த நிலையிலேயே, இரண்டாவது மனைவியை, முதலாவது மனைவி கொலை செய்துள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

முதலாவது மனைவி தனது கணவரை விட்டு பிரிந்த நிலையில், கணவர், இரண்டாவது திருமணம் செய்து வாழ்ந்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், மிக நீண்ட நாள்களின் பின்னர், முதலாவது மனைவி மீண்டும் வருகை தந்து, இரண்டாவது மனைவியை கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் முதலாவது மனைவி மற்றும் மகள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திம்புள்ள – பத்தனை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையில் புர்கா தடை விவகாரம்: தென்னாபிரிக்கா தடுக்கக் கோரிக்கை!

## அந்நாட்டு இஸ்லாமிய அமைப்புகள் விடுத்தன

கொழும்பு, மார்ச் 20

இலங்கையில் புர்காவை தடை செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை தென்னாபிரிக்கா தடுத்து நிறுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவிலுள்ள இஸ்லாமிய அமைப்புக்களே குறித்த கோரிக்கையை அந்நாட்டு அரசாங்கத்திடம் விடுத்துள்ளது.

தென்னாபிரிக்கா ஐக்கிய உலமா சபை மற்றும் தென்னாபிரிக்கா சர்வதேச விவகாரங்களிற்கான அமைச்சர் ஆகியோர், குறித்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென இஸ்லாமிய அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இதேவேளை உலமா பேரவை இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளதாவது, 'இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக கடுமையான குரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் தற்போது, புர்கா தடை மற்றும் மத்ரஸாக்கள் மூடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இவை அனைத்தும் பெரும்பான்மையின மக்களை திருப்திப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்' என அப்பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

# தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டம்

தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டம் தற்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமகிய கபில நுவன் அத்துகோறாள தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாடு நேற்று கந்தளாய் நகர மண்டபத்தில் நடைபெற்றது

தொழில் முயற்சியாளர்கள் வலுப்படுத்தும் அரசாங்கத்தினுடைய நோக்கத்திற்கிணங்க வங்கிகளை ஒரே கூரையின் கீழ் அமர்த்தி அதன் மூலம் தொழில் முயற்சியாளர்களுக்கான இலகு கடன் திட்டங்களை வழங்கி அவர்கள் மேற்கொள்கின்ற தொழில் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தி அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதே இதன் மூல நோக்கமாக காணப்பட்டது.

இந்நிகழ்வில், கந்தளாய் பிரதேச சபை தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, கந்தளாய் பிரதேச செயலாளர் திருமதி உபேக்ஷா குமாரி, திருகோணமலை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.பிரளாநாவன் உட்பட தொழில்முனைவோர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

